உதயம்

நிறுவியவர் :

கன்னிக்கண்ணன்

ஆசிரியை :

சகுந்தலா கிருஷ்ணன்

ஒளி 10 | பிப்ரவரி 1965 | கதிர் 10

இந்தியும் தமிழ் நாடும்! —தலையங்கம் 1

அன்னையின் அடிமை விலங் கொடித்த வீரன்—லாலா லஜபதி ராய் 3

ஒதிமரம் வளர்ந்தால் பயன் என்ன ? 4

மாணவர் கிளர்ச்சி 6

இந்திரா காந்தி இந்தியத் தாயின் இனிய புதல்வி (அட்டைப்பட விளக்கம்) 7

அனிச்சப்பூ —எழில் முதல்வன் 9

சாயாதேவி —கன்னிதாசன்

'உதயத்தில் வெளிவரும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனையே. எவரையும் குறிப்பிடுவன அல்ல.

—ஆசிரியர்

# இந்தியும் தமிழ்நாடும்

தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழி ஆவது இயற்கையான வளர்ச்சி. சட்ட பூர்வமாகவும் அது படிப்படியாக அமுலாகி வருகின்றது.

இதே போல, இந்தியா முழுவதற்குமாக இந்தி பொது மொழி ஆவது இயற்கையானது. சட்ட பூர்வமாக அது படிப்படியாக அமுலாவதன் கேந்திர மான கட்டம் தான் சென்ற ஜனவரி 26.

இந்தி ஆட்சி மொழி ஆவதினால் தமிழ் நாடு போன்ற இந்தி பேசாத மாநிலங்களுக்கு சிறிது பிரதிகூலங்களும் சங்கடங்களும் ஆரம்பத்தில் இருக்கலாம். குறிப்பாக மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஆரம்பத்தில் இதன் மூலம் இடர்ப்பாடுகள் இருக்கலாம்.

ஆனால் இந்தப் பிரதிகூலத்தினால் பாதகமோ, நஷ்டமோ இல்லாதவாறு செய்ய ஏற்கனவே ஏற்பாடு வகுக்கப்பட்டுவிட்டது. தமிழகத்திலும், இதர இந்தி பேசாத மாநிலங்களிலும் ஆங்கிலம் இதுநாள் போலவே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருககும். எத்தனை காலத்துக்குத் தேவையோ அததனை காலம் ஆங்கிலம் மத்திய ஆட்சிமொழியாக நீடிக்கும்.

ஆங்கிலத்தை நாம் அந்நிய மொழி என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை. அதை அறிவு மொழியாகக் கருதுகிறோம். உலகத்தின் அறிவு மொழியே நமக்கு ஆட்சி மொழியாக அமைந்ததில் பெருமையே தவிர சிறுமையில்லை.

ஆனால் இந்தி மாநிலத்தவர்கள் வேறுவிதமாக எண்ணுகிறார்கள். அவர்கள் கண்ணுக்கு ஆங்கிலம் பரதேச மொழியாக மட்டும் புலப்படுகிறது. அவர்கள் இந்தியில் நடத்தட்டும். நாம் ஆங்கிலத்திலேயே நடத்தலாம். வேம்பு தின்றவனுக்கு வேம்பு ருசி. கரும்பு தின்றவனுக்கு கரும்பு ருசி.

இந்தி ஆட்சி மொழியாக திணிக்கப்படாது, திணிக்கப்படும்படி விடமாட்டோம் என்று தலைவர் காமராஜ் உறுதி அளித்திருக்கிறார்.

அரசியல்வாதிகளும் பொதுநலவாதிகளும் அருள்கூர்ந்து ஒரு விஷயத்தில் கவனமாக இருக்கலாம். மொழிப்பிரச்னையை மேலும் சிக்கலாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். தேசத்தை எதிர்நோககியுள்ள பிரச்னைகளைக் கருதும்போது மொழித் தகராறு ஒரு சின்ன விஷயம். அதைப் பெரிதாக விளம்பரப்படுத்தாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழகத்தை தமிழே ஆளும், ஆங்கிலம் பக்கத் துணை தாதியாக இருக்கும். இந்தி வேண்டுமென்றால் வரும். வேண்டாமென்றால் வராது. எனவே மொழிப் பிரச்னையில் குழப்பிக்கொள்வதற்கோ, அலறித் துடிப்பதற்கோ ஒன்றும் இல்லை.



# அன்னையின் அடிமை விலங்கொடித்த விடுதலைவீரன் - லாலாலஜபதிராய்

இந்திய அன்னையின் அடிமை விலங்கொடிக்க ஆர்த்தெழுந்த ஆயிரம் ஆயிரம் உணர்ச்சி உள்ளங்களுக்கு வழிகாட்டிய மாபெரும் புரட்சித் தலைவர்களுள் லாலா லஜபதிராய் முதன்மையானவர் மட்டு மல்ல, முக்கியமானவரும்கூட. பால்-லால்-பால் என்ற முப்பெரும் மூர்த்திகளில் பால்-பால கங்காதர திலகரையும், லால்-லாலா லஜபதி ராயையும், பால்-விபின் சந்திரபாலையுமே குறிக்கும்.

விடுதலை வீரன்-அஞ்சாநெஞ்சன், மக்கள் சமத்துவத்திற்கு வீர வழி காட்டிய மாவீரன் லாலா லஜபதிராயின் நூற்றுண்டு விழாவை இன்று நாடு முழுதும் கொண்டாடுகிறோம்.

லாலா லஜபதிராய் வெறும் விடுதலை வேட்கைகொண்ட புரட்சி யாளர் மட்டுமல்ல, சமூகத்தில் அனைவருக்கும் சம அந்தஸ்து கிடைக்க போராடியவரும்கூட.

இந்திய இளைஞர்களின் இதயங்களைக் கவரும் வரிசையில், கிருஷ்ணன், அசோகன், சிவாஜி, மாஜினி, கரிபால்டி போன்ற வீர புருஷர்களின் தீரமிகுச் செயல்களை நூல்வடிவில் எழுதி வெளியிட்ட பெருமையும் லாலாலஜபதிராய் அவர்களுக்கு உண்டு.

இந்திய மக்கள் சமூகத்தின் மோசமான வாழ்க்கை நிலையை உலகத்தின் கண்களுக்கு படம் பிடித்துக் காட்டும் வகையில் அவர் எழுதிய "இன்பமற்ற இந்தியா" (Unhappy India) என்ற நூல் புதிய தோர் சகாப்தத்திற்கு வழிகோலக் காரணமாக இருந்தது என்றுல் அது மிகையல்ல.

அந்நிய நாட்டுப் பொருட்களை பகிஷ்கரித்து சுதேசிப் பொருட்களில் மக்களுக்கு மோகமும், வேகமும் ஏற்பட அவர் மேற்கொண்ட புரட்சி கரமான செயல்கள் இன்றும், என்றும் நிலைத்து நிற்கும் ஓர் அரிய சாதனை.

இப்படி, இந்திய விடுதலைக்கும், மக்கள் சமூகத்தின் நல்வாழ்வுக்கும் அயராது தளராது பணிசெய்து அந்த புரட்சிப்பணிகளுக்கே தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த லாலா லஜபதிராய் போன்ற அமரத் தியாகிகள் இறந்தும் இருப்பவர்கள்! மறைந்தும் வாழ்பவர்கள்!

உலகம் உள்ளளவும் உலகில் இந்திய நாடு உள்ளளவும் அந்த நாட்டில் மக்கள் உள்ளளவும் அவரது திருநாமம் என்றும் அழியா அமரத்வம் பெற்று வாழும்!

# அக்கம் பக்கம்

## ஓதிமரம் வளர்ந்து பயன் என்ன?

பத்திரிகைகள் வளர்ச்சியில் உயிராக விளங்குவது கொள்கை; உடலாக விளங்குவது விளம்பரம். நல்ல எழுத்தும் விரிவான விற்பனையும் இந்த வளர்ச்சிக்கு உரமூட்டும்.

பத்திரிகைத் தொழிலில் தமிழ் நாட்டில் வேண்டாத வளர்ச்சி ஒன்று பெருகிவிட்டிருக்கிறது. ஒரே நபர் ஜில்லா தோறும் பத்திரிகை நடத்துவது, ஒரே நபர் தேசத்தின் பல்வேறு முக்கிய நகரங்களிலிருந்தும் பத்திரிகை நடத்துவது என்ற முறை இங்கு வேரூன்றிக்கொண்டு வருகின்றது.

பொது மக்களின் எண்ண எழுச்சிகளை, அபிப்பிராய சுதந்திரங்களை, உலகம் அறிய முடியாதபடி கழுத்துப்பிடி பிடிப்பவை இந்தக் கொக்கிப் பத்திரிகைகள்தான். இந்த வளர்ச்சிப் போக்கை அடக்கி ஒடுக்கவேண்டும் என்று நாம் சொல்லவில்லை. நில உடமை உச்சவரம்பு போல, இந்த பத்திரிகை உடமைக்கு மேல் வரம்பு வேண்டும் என்று கேட்கவில்லை. சோஷலிச சமுதாய பரிணாம வளர்ச்சியில் இந்த நிலைமைகள் எல்லாம் பின்னால் எழும்.

இப்போது நாம் கோருவது, இந்தப் பத்திரிகைத் திமிலங்களும் முதலைகளும் வாழும் தடாகத்தில் சிறு பத்திரிகைகளும் நிலைத்து உயிர்வாழ, வளர வழி செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான். அரசாங்கத் தரப்பினர் இவ்விஷயமாக நடவடிக்கை எடுக்காமல் இல்லை; எடுத்து வருகிறார்கள். ஆனால் இந்த நடவடிக்கைகள் உருப்படியாக பூரணமானதாக இருக்கவேண்டும்; விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிறு பத்திரிகைகள் பற்றிய விசாரணைக் கமிட்டியின் தலைவர் திரு. ஆர். ஆர். திவாகர் அண்மையில் சென்னைக்கு விஜயம் செய்தபோது சிறு பத்திரிகைகளை எதிர் நோக்கும் பிரச்னைகளையும் சங்கடங்களையும் மிக நன்றாக விளக்கினார்.

மக்கள், நல்ல அரிசி கிடைக்கவேண்டும் என்பதற்காக எப்படித் தவியாகத் தவிக்கிறார்களோ, அதே போல சிறு பத்திரிகைகள், பத்திரிகைக் காகிதத்துக்காக அல்லல்படுகின்றன. காகித சப்ளை நிலைமையில் அபிவிருத்தி ஏற்படும் வரை சமசீரான வினியோகம் தேவை. மத்திய மாநில அரசுகள் விளம்பரங்கள் தருவதில், சிறு பத்திரிகைகளுக்கும் உரிய பங்கு ஒதுக்கப்படவேண்டும். பல விழாக்களுக்கு சிறு பத்திரிகைகளுக்கு அழைப்பு வருவதில்லை. திட்டப் பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது சிறு பத்திரிகைகள் அழைக்கப் படுவதில்லை.

திவாகர் அவர்கள், சிறு பத்திரிகைகளின் பிரச்னைகளை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இதுவரை இக்கமிட்டி 4000 சாட்சியங்களை விசாரித்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் இக்கமிட்டி தனது அறிக்கையை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்க இருக்கிறது.

சிறு நகரங்களில் 10,000க்கு குறைந்த விற்பனை உள்ள தினப் பத்திரிகைகளும், 5000க்கு குறைவான விற்பனையுள்ள வார, மாத பத்திரிகைகளும் சிறு பத்திரிகைகளாக குறிக்கப்பட்டுள்ளன.

பெரிய பத்திரிகைகள் பல லட்சக் கணக்கான பிரதிகளை அச்சிட்டு வினியோகிக்கும் போது சிறு பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அதற்கொப்ப 10,000-க்கு உள்பட்ட எண்ணிக்கை உடையதாக இருப்பதுதானே நியாயம். இதையும் அரசு உடனடி கவனிக்க வேண்டும்.

## பயன்தரும் செடிகள்போல சிறு பத்திரிகை வளர வேண்டும்!

சிறு பத்திரிகைகளுக்குப் போதுமான காகிதமும், அரசாங்க விளம்பரமும் கிடைக்கச் செய்வதில் கமிட்டியினர் தீர்க்கமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பத்திரிகைகளின் நன்மையைக் கருதி மட்டும் நாம் இப்படிச் சொல்லவில்லை. நமது நாட்டில் ஜனநாயகம் நல்ல முறையில் வளர்ச்சி பெறவேண்டுமானால், பொதுமக்களின் கருத்துக்களையும் உள்ளூர் பிரச்னைகளையும் சமுதாயம் அறிய வேண்டுமானால் சிறு பத்திரிகைகள்தான் அதற்குரிய மார்க்கம். நாட்டில் இன்று மிக வேண்டப்படும் ஒற்றுமை உணர்ச்சியை வளர்ப்பதற்கும் தேசிய உணர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் இந்தப் பத்திரிகைகள்தான் பெரிய சக்தியாகும்.

தவிர இன்று நாட்டில் விஷமப் பிரச்சாரங்கள் அதிகரித்துவிட்டன. ஒற்றுமையைக் குலைக்கக்கூடிய சக்திகள் தலைதூக்குகின்றன. மிகச் சாதாரணமான சிறு விஷயங்களைப் பெரிதுபடுத்தி, தேச மக்களிடையே குரோத உணர்ச்சியை வளர்ப்பவர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறார்கள். இந்தத் தீய சக்திகளை எல்லாம் கருவறுக்கவும், இவைகளின் உண்மைத் தோற்றத்தை எடுத்துக்காட்டி அம்பலப்படுத்தவும் சிறு பத்திரிகைகள்தான் இன்று தேசியத் தேவையாக இருக்கின்றன.

ஓதி மரம் பெரிதாக இருக்கலாம். ஆனால் அதை வைத்தே திருப்திப்பட்டுக் கொள்வதற்கில்லை. பயன் தரும் செடிகள் பல வேண்டும். அந்தச் செடிகள்தாள் சிறு பத்திரிகைகள்.

### அனிச்சப்பூ-தொடர்கதை!

இந்த இதழோடு அனிச்சப்பூ-தொடர் கதை முடிவடைகிறது. சென்ற ஓராண்டு காலத்திற்கும் மேலாக தொடர்ந்து வெளிவந்த இத்தொடர் கதையை 'உதயம்' வாசக அன்பர்க்ள் ரசித்து சுவைத்தனர் என்பதற்கு அவர்கள் அவ்வப்போது எழுதிய கடிதங்களே சான்று.

எழில் மதி, நந்தன், இளங்கோ என்ற மூன்று கதாபாத்திரங்களைச் சுற்றியே கதை ஓடியது. நந்தன், இளங்கோவன் என்ற இரு கதாநாயகர்களும் கதையின் உடல் என்றால் எழில்மதி என்ற கதாநாயகி கதையின் உயிர் ஆவாள்!

புதிய உத்தி, புதிய நடை, புதிய பாதை இவற்றை ஆதாரமாகக் கொண்ட 'அனிச்சப்பூ'வை திரு. எழில் முதல்வன் எம். ஏ. அவர்கள் அமுதத் தமிழில், தேன் சிந்தும் அழகு நடையில் ஆக்கித் தந்ததற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். 'உதயம்' வாசகர்களுக்கு அன்பர் எழில் முதல்வன் புதுமுகமல்ல. தமிழ்க்கவிதை உலகத்திற்கும் அவர் புதியவரல்ல. 'அனிச்சப்பூ' என்ற தொடர்கதை மட்டும் அவருக்குப் புதியது. முதற்படைப்பு. முதற்படைப்பிலேயே முதன்மையான எழுத்தாளர் என்பதை நிரூபித்துவிட்டார். அவருக்கு 'உதயம்' வாசகர்கள் சார்பில் வாழ்த்துக் கூறுகிறோம் இன்னும் பலநூறு நல்ல கதைகளையும், கவிதைகளையும் இயற்றி தமிழன்னையின் பாத கமலங்களுக்கு படைக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறோம்.

## மாணவர் கிளர்ச்சி!

தமிழகத்தில் சுதந்திரத்திற்குப் பிறகு இதுவரை என்றும் கண்டும் கேட்டுமிராத அளவுக்கு மாணவர்கள் கொதித்து எழுந்து கிளர்ச்சிக்குள்ளாகியிருப்பது மிகவும் வேதனைக்குரிய சம்பவமாகும். படித்து பட்டம் பெற்றும் வாழ்க்கையில் முன்னேற வேண்டிய மாணவர்கள் இப்படி கிளர்ச்சியில் ஈடுபட காரணமாக இருந்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி அவற்றை மாநில, மத்திய அரசினர் உடனடி கவனித்து விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு அமைதிக்கு ஆவன செய்ய வேண்டுகிறோம்.

கிளர்ச்சி காலங்களில் ஆட்சியில் இருப்பவர்கள் கூடிய வரையில் பொறுமையைக் கையாண்டு நிலைமைக்குத் தக்கபடி நடவடிக்கை எடுக்க வேண்டுமே அன்றி அதை விடுத்து கிளர்ச்சிக்காரர்கள் பேட்டி கண்டு நிலைமையில் தெளிவு காண விழையும்போது அதை உதாசீனம் செய்து விரட்டி அடிப்பது விவேகமான செயலல்ல. இப்படிச் செய்வது மேலும் கிளர்ச்சிக்காரர்களின் கரங்களுக்கு வலுவேற்றி வன் செயல்களைத் தூண்டுவதற்கொப்பாகும். கிளர்ச்சிகள் உச்ச கட்டம் அடைந்து மக்களின் உயிருக்கும் உடமைக்கும் கேடுகள் விளைந்த பிறகு

ஆட்சியாளர்கள் வளைந்து கொடுத்து 'வாருங்கள் வந்து பேசுங்கள்' என்று வருந்தி அழைப்பது தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது போலாகும்.

இனிமேல் அரசினர் வீண் போலிக் கவுரங்களைப் பாராமல், மக்கள் நிலைமையில் தெளிவு பிறக்காது சூழ்நிலைகண்டு தவிக்கும் நேரத்தில் முன் எச்சரிக்கையோடு நடந்து கொள்வது நல்லது.

தேசீய எண்ணமும் நாட்டுப் பற்றும் உள்ள மாணவர்களும், காங்கிரஸ் சார்புள்ள மாணவர் காங்கிரஸ் அமைப்புகளும் கிளர்ச்சியின் போது என்ன செய்துகொண்டிருந்தது என்ற கேள்வி எழுவது இயற்கையே. நூற்றுக்கு அறுபது சதவிகிதத்திற்கும் மேலாக உள்ள தேசீய அணியைச் சார்ந்த மாணவர்கள் கிளர்ச்சியின்போது எங்கே சென்றிருந்தனர்? என்ன செய்து கொண்டிருந்தனர்? இந்தக் கிளர்ச்சிக்கும் தங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று இனிமேல் சொல்லிக் கொண்டாலும் கூட இதுவரை, அவர்கள் வாய் திறக்காமல் மௌனமாக இருந்ததற்கான காரணங்கள் என்ன? இவற்றை எல்லாம் கவனிக்கும் போது மாணவர் காங்கிரஸ் அமைப்பு சரியானபடி இயங்கவில்லை, போதிய வளர்ச்சி அடையவில்லை, வசதிகள் இருந்தும் வாய்ப்புகளை பயன்படுத்தவில்லை என்றுதானே தெரிகிறது.

பெரிய பெரிய தலைவர்களுக்கும், முதலமைச்சர்களுக்கும், மத்திய மாநில அமைச்சர்களுக்கும் விருந்து கொடுத்து மகிழ்வதோடு மாணவர் காங்கிரசின் வேலை முடிந்துவிட்டதாக நினைக்கிறார்களோ என்னமோ? மாணவர் உலகத்தில் தீயசக்திகள் தலை தூக்கும் போது மாணவர் காங்கிரஸ் போன்ற தேசீய சக்திகள் நிலைமையை விளக்கி தெளிவு ஏற்படுத்தி அதற்கேற்றபடி நடவடிக்கைகளை மேற்கொண்டு அமைதியை நிலைநாட்டியிருக்கலாமே! ஏன் செய்யவில்லை?

## வாழ்வும் சாவும்

"எ. மு."

அகத்தி முகையினைப் போலே பிறைநிலா
அந்தியில் மேற்றிசை வானில் முளைத்தது!
நகைத்த உடுக்கணம் மின்னும் மணியென
நான்கு புறமும் இறைந்து கிடந்தன!
திகைப்பும் வியப்பும விளைக்கும் இயற்கைத்
திறத்தினை என்மனம் எண்ணி மகிழ்ந்தது!
மிகப்பெரும் அண்ட வெளியினைக் கண்டதும்
விரிந்து நெடிதாய் வளர்ந்தது நெஞ்சமே!

கதிரோன் மறைத்த மீனை இருட்டு
கருவுற்று ஈன்றிடும் காட்சியைக் கண்டேன்!
பொதிஇருள் வெய்யோன் மறைத்தவின் மீனைப்
புலப்படச் செய்வது போலவே வாழ்வில்
புதைந்த ரகசிய உண்மை வெளிப்படும்
புதுமை அனுபவம் சாவிலே உண்டுகாண்!
எதற்கும் அஞ் சோம்! நாம் யார்க்கும் குடியலேம்!
ஏற்போம் சாவையும் என்று தெளிந்தேன்!

சாவு நிரந்தரத் தூக்கம்; இவ் வாழ்க்கை,
சாசு வதம் இலாக் கண்விழிப் பாகும்!
பாவும் ஊடுமாய்த் துன்பமும் இன்பமும்
பின்னிக் கிடப்பதே வாழ்வெனக் கொள்க!
மேவும் நதிநீர் செல்லும் வழியே
மிதக்கும் புணைபோல் உயிர் முறைப் படூஉம்!
ஆவதும் கெட்டே அழிவதும் நமது
ஆற்றலில் இல்லை; அறிக இதனையே!

# இந்திரா காந்தி-இந்தியத் தாயின் இனிய புதல்வி

—அட்டைப்பட விளக்கம்

உலக வரலாற்றிலேயே ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கிய உத்தமத்தலைவர், மக்கள் தலைவன் முடிசூடா மன்னன் பண்டித நேருஜியே ஆவார். அவர் உடலால் மறைந்து உணர்வால் வாழ்கின்ற ஒரு உலகப் பேரொளி. இந்திய வரலாற்றிலேயே நேருஜியின் ஆற்றலும், அரசாளும் தனித்திறனும் அசோகனையும் மிஞ்சிவிட்டது என்று சொன்னால் அது மிகையல்ல. அத்தகைய ஒரு மாமேதை (Synthatic Genious) யின் வாரிசாக இன்று நம்மிடையே இருந்துவரும் ஓரே ஒருவர் இந்திரா காந்தியாவார்.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்திய தாய்க் குலத்தின் ஒருத்தனித் திலகம். நேருஜியின் அருமைப் புதல்வி என்பதைவிட பாரதத் தாயின் பிரிய புதல்வி என்று சொல்வதே சாலப் பொருந்தும். அரசியல் ஞானமும், சுதந்திரப்போராட்ட வேகமும் நிரம்பி, நாட்டின் நலனையே பெரிதெனக் கருதிய அலாகாபாத் ஆனந்த பவனத்தின் செல்வப் புதல்வி இந்திரா காந்தி விடுதலைப் போராட்டச்சூழ்நிலையிலே பிறந்து வளர்ந்து, வாழ்ந்து வருபவர். எனவே அரசியல் அவருடனும், அவர் அரசியலுடனும் இரண்டறக் கலந்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. நேர் நிகரற்ற நேருஜியை தந்தையராகப் பெற்ற திருமதி இந்திராகாந்தி, தாம் பிறந்தது முதல் அருமை தந்தையாரின் நிழலிலேயே வாழ்ந்தவர்கள், இன்று தந்தையை இழந்து தனித்து நிற்கிறார்கள்.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் செல்லாத நாடுகள் இல்லை; அவரது பாதம் படாத ஊர்களே கிடையாது. கவிக்குயில் சரோஜினி நாயுடுவுக்குப் பிறகு காங்கிரஸ் சரித்திரத்திலேயே மிகக் குறைந்த வயதுடைய ஒரு பெண்மணி அகில இந்திய காங்கிரஸ் தலைவியாக இருந்தாரென்றால் அது இந்திரா காந்தி அம்மையாரே ஆவர்.

நல்ல அரசியல் தெளிவும், ஆக்கப்பணிகளில் ஆர்வமும், அயராத உழைப்பில் உற்சாகமும் கலாச்சார விவகாரங்களில் தேர்ச்சியும் உடைய திருமதி இந்திரா அவர்கள் நம் நாட்டு ஒலிபரப்பு அமைச்சராக இருப்பது பாரதத்தின் பெருமைக்கு ஒரு பெருமையாகும். இந்திய சுதந்திர அமைச்சரவையில் 'காபினட்' அந்தஸ்துள்ள முதல் பெண் அமைச்சரும் இந்திராவே யாவார்.

அவரது சீரிய ஆட்சி காலத்தில், அழுது வடிந்துகொண்டிருக்கும் அகில இந்திய ரேடியோ நிகழ்ச்சிகளை ஒழித்து; நிகழ்ச்சிகளில் ஒரு புதிய வேகமும் விறுவிறுப்பும் ஏற்படும் விதத்தில் புதுப்பாணிகளை கையாள ஆவன செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

வானொலி நிலையங்களில் அடைந்து கிடக்கும் பிற்போக்கு கும்பல்கள், பிரிவினை சக்திகள், தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் தேசிய விரோதிகள் போன்ற தீய சக்திகளுக்கும் சீக்கிரமே விடை கொடுத்தனுப்புவார்கள் என்றும் நாடும், நன்மக்களும் எதிர் பார்க்கிறார்கள்.

தேசத்தின் முதுகெலும்பாக விளங்கும் சிறு பத்திரிகைகளை தக்க முறையில் பேணி காத்து, வளர்த்து வரும் பெரும் பொறுப்பும் திருமதி இந்திரா காந்தி அவர்களிடமே இருப்பதால் அதற்கு அவர்கள் விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆவன செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

"உதயம்" அறிமுகப்படுத்தும்

புதிய எழுத்தாளர்

**திரு. ஆர் கண்ணன்**

எழுதும்

## ஏணி

குறுநாவல்

**அடுத்த இதழில்**

**ஆரம்பமாகிறது.**

—ஆசிரியர்

**உதயம்**

# 1964-65
# போனஸ் ஆண்டு!

எல்.ஐ.சியின் ஐந்தாவது மதிப்பீடு 1965 மார்ச் 31-ந் தேதி முடிய செய்யப்படும். மதிப்பீட்டுத் தேதியில், முழுக் காப்புத் தொகைக்கு (Full Sum Assured) அமுலிலிருக்கும் இலாபத்துடன்கூடிய பாலிசிகள் அனைத்தும் இலாபத்தில் பங்கு பெற உரிமையுள்ளவை ஆகும்

1963 மார்ச் 31 தேதி முடிய செய்யப்பட்ட நான்காவது மதிப்பீடு
வெளிப்படுத்திய அதிகப்படி போனசு வீதங்களாவன :

| முழு ஆயுள் அஷ்யூரன்ஸ் : ரூ. 17.50 ஆயிரத்திற்கு ஆண்டிற்கு | என்டௌமென்ட் அஷ்யூரன்ஸ் : ரூ. 14.00 ஆயிரத்திற்கு ஆண்டிற்கு |
|---|---|

உங்கள் நன்மையைக் கருதி, 1965 மார்ச் 31-ந் தேதியன்று உங்கள் பாலிசி முழுக் காப்புத் தொகைக்கு அமுலிலிருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். 1965 மார்ச் 31-ந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ இலாபத்துடன் கூடிய பாலிசி ஒன்றினை எடுப்பதும் நன்மை பயக்கும். ஏனெனில், நீங்கள் எடுக்கும் புதிய பாலிசி ஓராண்டு போனசைப் பெற உரிமை பெறும்.


**நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்னாளே**
**நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னாளாகும்.**

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

ASP/LIC/AS 22 TAM




# அனிச்சப்பூ




## 25

இந்த இருள் ஒழிய ஏதும் நான்
காண்கிலேன்
இந்த இருள் அகல்வ தெப்படியோ...
—துகளறு போதம்

நிலவிலே பூப்பந்தல் ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. முல்லை, மல்லிகை, ரோஜா, இருவாட்சி முதலிய பலவகையான மலர் களால் ஆன விதானம் அழகுடன் பொலி கிறது. பலவகையான வேலைப்பாடுகளுடன் கூடிய பொன் ஊஞ் சல் ஒன்று தொங்கிக் கொண் டிருக்கிறது. நவமணிகளால் இழைக்கப்பட்ட அவ் விருக்கையில் எழில் மதி ஒசியும் மின்ன லைப் போல சாய்ந்து அமர்ந்திருக்கிருள். காற்றலைகளில் மிதந்து வந்த தேவ கானம் ஒன்று அமுத மழையாக எங் கும் பரவி ஒலிக்கிறது. அணிகளுக்கெல் லாம் அணியாகவும், அலங்காரங்களுக்கெல் லாம் அலங்காரமாகவும், உபமானங்களுக் கெல்லாம் உபமானங்களாகவும் விளங்கும் எழில்மதி வீணையும் கையுமாக அந்த மணி ஊஞ்சலில் அமர்ந்து தன் பட்டுப் பாதங்களை வான வெளியில் அழுந்த ஊன்றி வேகமாக ஆடுகிருள். இளங்கோ அவளது பாதங்களைத் தன் கரங்களில் தாங்கிக் கொள்ளத் துடிப் பவனைப் போல அவளையே நிமிர்ந்து நோக் கிக் கொண்டு கீழே நிற்கிருன்.

''பெண்ணே! உன் போன்ற அழகி களின் பார்வை பட்டால் மாமரம் பூக்கும் என்று இலக்கியங்களிலே எழுதி வைத்திருக் கிருர்கள். அது எந்த அளவுக்கு உண் மையோ எனக்குத் தெரியாது. ஆனல் பெண்ணின் கடை விழி பார்வையில் ஆண் களின் நெஞ்சம் மலரும் என்பதை மட்டும் நான் உணர்கிறேன். பெண்மையை இரக் கத்தின் வடிவம் என்று போற்றுகிருர்கள். என்னைப் பொறுத்தவரை உன் நெஞ்சம் கல்லாகி விட்டதா? எழில்மதி! மழைத்துளி வெறும் கட்டாந்தரையில், விழுந்தால் அத ஞல் பயனில்லை; அது ஒரு சிப்பிக்குள் விழுந்தால் அங்கே முத்துப் பிறக்கிறது. உன் அருள் மழை என் நெஞ்சம் என்னும் சிப்பிக்குள் விழுந்துகொண்டே இருக்கு மானல் ஆயிரமாயிரம் கவிதை முத்துக்கள் அங்கே பிறந்து கொண்டே இருக்கும்.

அந்தக் கவிதை முத் துக்களை உன் பாதங் களில் என்னுடைய காணிக்கையாகக் கொட்டி வைத்து விட்டு நான் உன் னையே வாழ்த்திக் கொண்டிருப்பேன்'' இத்தனை கருத்துக் களையும் வாயினல் பேசி வெளிப்படுத்த முடியாது என்று கருதியவனைப் போல— இளங்கோ அவளையே பார்த்துக் கொண் டிருந்தான்!

''ஏ! கவிஞனே! நிலையான அழகைப் பாடவேண்டிய நீ அழிந்து போகிற ஒன்றுக்காக ஆசையால் தாழ்ந்து நிற்கலாமா! பெண் தெய்வம்; பெண்மையை வாழ்க என்று போற்று'' என எங்கிருந்தோ ஒரு குரல் கேட்கிறது.

இளங்கோ உரத்த குரலில் யாரையோ சவால் விட்டு அழைப்பது போலக் கம்பீரமாகப் பேசுகிறான்: ''அட, பைத்தியக் காரர்களே! தாயைத் தானடா தெய்வமாகப் போற்ற வேண்டும். எல்லாப் பெண்களையும் நீங்கள் தெய்வமாகக் கருதிப் போற்றத் தொடங்கி விட்டால் பெண்மைக்கு எந்த விதமான கௌரவத்தைக் கொடுக்க வேண்டுமோ, அந்த கௌரவத்தை நீங்கள் கொடுக்கவில்லை என்பதுதானடா பொருள்.''

ஊஞ்சல் மேலே உயருகிறது; எழில்மதி வான உலகில் மின்னற் கொடியைப் போலத் தோன்றி மறைகிறாள்.

கண் விழித்த இளங்கோவுக்குத் தான் கண்டவை அனைத்துமே கனவு என்ற உண்மை தெரிய வந்தது. கடற்கரையில், சாலைக்குப் பக்கத்தே அமைந்திருந்த நடைபாதையில், உடைந்து போன ஒரு சிமெண்ட் பலகையில் குளிரால் நடுங்கியவாறே படுத்துக் கொண்டிருந்த இளங்கோ விழித்துப் பார்த்து விட்டு எழுந்து உட்கார்ந்தான். மாநிலக் கல்லூரி டவரில் இருந்த கடிகாரம் விடிவதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது என்பதைக் காட்டியது.

கொஞ்ச நாட்களாக இளங்கோ இப்படித் தான் வாழ்ந்து கொண்டிருந்தான். ஏதாவது பாட்டு எழுதுவது, அதைப் பத்திரிக்கைக்காரனிடம் கொண்டு போய்க் கொடுத்து விட்டு ஐந்தோ பத்தோ வாங்குவது, அதைக் கொண்டு போய் ஹோட்டல்காரனிடம் கொடுத்து வயிற்றை நிரப்பிக்கொண்டு கிடைத்த இடத்தில் தூங்குவது என்பதே அவன் வகுத்துக் கொண்ட வாழ்க்கை முறையாக மாறிவிட்டது.

எத்தனையோ நண்பர்கள் அவனைச் சந்தித்து ''ஏண்டா இப்படி பைத்தியக்காரன் போல அலைந்து கொண்டிருக்கிறாய். எங்கள் வீட்டில் வந்து தங்கிக்கொள்ளலாமே,'' என்று அழைத்தனர். அவனோ யாருடைய அழைப்பையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

''சுமைகளைச் சுமப்பதற்கென்றே உலகத்தில் பிறந்துவிட்ட நான் மற்றவர்களுக்குச் சுமையாக இருக்க விரும்பவில்லை. நான் இப்பொழுதுதான் உலகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து என்னையும் உங்களைப் போலப் பதர் ஆக்கி விடாதீர்கள். நான் பசியால் அலைய வேண்டும். வேட்கையால் தவிக்க வேண்டும். என். ஆசைகள் எதுவுமே நிறைவேறாமல் நான் அழுது அழுது அந்த வெப்பத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கருக வேண்டும். இன்பமாக இருந்தாலும் சரி, துன்பமாக இருந்தாலும் சரி, அதை அணு அணுவாக—மதுக்கோப்பையில் கடைசிச் சொட்டு இருக்கிற வரை நாவால் சுவைத்துப் பருகுவது போலக் கடைசி வரை அனுபவித்தே தீர்க்கவேண்டும். அந்த அனுபவத்திலே நான் கற்றுக் கொள்ளும் உண்மைகள்தான் என்னைப் பாடத் தூண்டும். அந்த அனுபவத்தை நான் இழக்க விரும்பவில்லை ..மனிதன் பிறருடைய உதவியின்றி உலகத்திலே வாழ முடியாது என்பது ஓரளவு உண்மைதான். இருளில் ஒரு பொருளைக் காண்பதற்குக் கண்மட்டும் இருந்தால் போதாது; விளக்கும் தேவை. அதுபோல மனிதன் ஒவ்வொருவனுக்கும் சுயமுயற்சி மட்டும் இருந்தால் போதாது, பிறருடைய உதவியும் தேவை. அந்தத் தத்துவம் எனக்கும் தெரியும்...ஆனால் பிறரிடத்திலே உதவிக்குச் சென்று நம்மை நாமே தகுதியற்றவர்களாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. ஆகவே நீங்கள் யாரும் எனக்கு உதவி செய்ய முடியவில்லையே என்று வருந்த வேண்டாம். நான் உங்கள் உதவியை நாடி வரும்போது நீங்கள் எனக்குச் செய்யுங்கள்'' என்று கூறி அனுப்பிவிட்டான்.

குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த இளங்கோ சிகரெட்டைப் புகைத்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டான். வெப்பத்தால் கண்கள் எரிந்தன. அவனது உடல் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டிருப்பதை உணர்ந்தான். மார்பு எலும்புகள் கூடுகள் போல வெளியே துருத்திக் கொண்டிருப்பதைத் தன் கையால் தடவிப் பார்த்துக் கொண்டான்.

''உடலைப் புறக்கணித்தே வாழ்ந்தாகி விட்டது. இனிக் கவலைப்பட்டு என்ன பயன். மழையும் புயலும் சேர்ந்து கொண்டால் மிகப் பெரிய ஆலமரம் கூட கீழே

விழத்தான் செய்யும். உணவுப் போராட்டத்திற்கும், ஒழுக்கக் குறைபாட்டிற்கும் ஒரே நேரத்தில் ஆளாகும் உடல் எத்தனை நாளைக்குத்தான் நீடித்து நிற்க முடியும்'' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான்.

தாமரை மலர் வானத்தை நோக்கிக் கொண்டிருந்தாலும் அதன் தண்டு சேற்றுக் குள்ளேயே சிக்கிக் கிடப்பது போல இளங்கோவின் சிந்தனைகள் மேலே எழுந்து சென்றாலும், உடலும், வாழ்க்கைப் போக்கும் மிகமிக அருவருக்கத்தக்க நிலையிலேயே அமிழ்ந்து கிடந்தது. குடந்தைக் கல்லூரியில் பேராசிரியர் அம்பலவாணர் மெய் கண்ட தேவரின் துகளறு போதச் செய்யுள் ஒன்றைக் கூறி 'இந்த இருள் ஒழிய ஏதும் நான் காண்கிலேன். இந்த இருள் அகல்வது எப்படியோ?' என்ற வரிகட்கு அழகாகக் கொடுத்த விளக்கம் நினைவுக்கு வந்தது. ''நானும் இருளில்தான் கிடக்கிறேன்; வாழ்க்கை இருட்டறையாகத்தான் இருக்கிறது; இந்த இருளிலிருந்து என்னால் மீள முடியவில்லையே'' என்று தனக்குத்தானே அனுதாபம் தெரிவித்துக் கொண்ட இளங்கோ நிமிர்ந்து படுத்துக்கொண்டு வானத்தை நோக்கினான்.

வானத்தில் நட்சத்திரங்கள் இறைந்து கிடந்தன. பெண்ணின் மார்பகங்கள் அவள் பேதையாக இருக்கும்போது இருக்கும் இடம் தெரியாமலே இருந்து அவள் மங்கையானவுடன் திடீரென வெளிப்பட்டுத் தோன்றுவது போல பகல் நேரத்தில் பார்வைக்குப் படாத நட்சத்திரங்கள் இரவு வந்ததும் இவ்வளவு அழகாகத் தெரிகின்றனவே என்று இளங்கோ வியப்பில் மூழ்கினான். சாவு என்பதும் இருட்டைப் போன்றதுதான். கதிரவன் மறைத்த விண்மீன்களை இரவு வெளிப்படுத்துவது போல, வாழ்க்கை மறைத்த சில உண்மைகளைச் சாவு வெளிப்படுத்து கிறது, அதற்காகவாவது நாம் சாவை மனமார வரவேற்கத்தான் வேண்டும்'' என்று எண்ணிக்கொண்டான். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவியின் பார்வை நிலத்திலே படிந்திருப்பது போல இளங்கோவின் மனம் தத்துவ விசாரத்தில் இறங்கினாலும் யதார்த்த வாழ்வையும் அவன் மறக்கவில்லை.

காலையில் எழுந்ததும் 'பிராட்வே'க்குச் சென்று அந்தப் பதிப்பகத்தாரைப் பார்த்துப் பணம் கேட்க வேண்டும். வாணி பிக்சர்ஸ் முதலாளியைப் பார்த்து ஒரு பாட்டுக்குச் 'சான்ஸ்' கேட்க வேண்டும்'' என்று மறு நாளுக்குரிய திட்டத்தை வகுத்துக் கொண்டான்.

பொழுது விடிந்ததும் ஒரு ஹோட்டலுக்குச் சென்று காப்பி குடித்துவிட்டுக் கோடம் பாக்கத்துக்குப் பஸ் ஏறினான். அந்தத் தென்னாட்டு 'ஹாலிவுட்'டில்தான் பிரபலமான 'வாணி ஸ்டுடியோ' அமைந்திருந்தது. படாதிபதியின் தரிசனம் கிடைப்பதற்கே பத்துமணி வரை இளங்கோ காத்துக் கிடக்க வேண்டியவன் ஆனான். படாதிபதி கடைசியில் இளங்கோவின்பால் கருணைகொண்டு ''கவிஞர் ஐயா...அடுத்த படத்துக்குப் பார்க்கலாம், இந்தப் படத்துக்கு வேறு ஆட்களை 'புக்' பண்ணிட்டேன்'' என்றார்.

''நீங்கள் விரும்பினால் பாட்டு மட்டுமல்ல; கதை வசனம் எல்லாமே எழுதித் தர்றேன். நல்ல 'ப்ளாட்' என்னிடம் இருக்கிறது'' என்றான் இளங்கோ.

''இல்லீங்க......நாங்க வங்காளக் கதைகள் இரண்டை முன்னமேயே 'செலக்ட்' பண்ணி வச்சிட்டோம்'' என்றார் படாதிபதி.

''ஏன்சார்! தமிழ்நாட்டிலே கதை கிடைக்காமல்தான் வங்காளத்துக்குப் போகிறீர்களா? இங்கே என்ன கதைக்குப் பஞ்சமா வந்துவிட்டது. தமிழ்நாட்டில் தடுக்கி விழுந்தால் எழுத்தாளன் மேல்தானே சார் விழவேண்டி யிருக்கிறது. வருஷத்துக்கு மூணு நாவலை பிரசவிக்கிற ஜாம்பவான்கள் வாழுகிற நாடாயிற்றே இது'' என்று இளங்கோ சற்று சூடாகவே கேட்டான்.

''கவிஞர் ஐயா, தமிழ்நாட்டுக் கதை எதையுமே துணிஞ்சு படம் எடுக்க முடியலே. அப்படி எடுத்துட்டால் கதைக்கு உரியவன் என்று சொல்லிக்கொண்டு பத்துப் பேராவது வழக்குப் போடுவானே சார்! தமிழ்நாட்டிலேதான் இலக்கிய விபச்சாரம் மலிந்து போச்சே'' என்றார்.

''அப்படிச் சொல்லாதீங்க. தமிழனுக்கு எப்போதுமே விரிந்த மனோபாவம் உண்டு. தன்னுடையது, பிறருடையது என்று பிரித்துப் பேசுகிற பிரிவினை மனப்பான்மை கிடையாது. அந்த மனோபாவத்தின் விளைவு சார் இது. நீங்கள் சொல்வதை நானும் ஒத்துக் கொள்கிறேன். அதற்காக எல்லாரையுமே ஒரே ரகத்தில் சேர்த்துவிடக் கூடாது'' என்றான் இளங்கோ.

''கவிஞரே, அது போகட்டும்......இப்ப உங்களுக்கு என்ன வேணும். 'சான்ஸ்' தானே?...வந்த விஷயத்தைப் பேசுங்க... அடுத்த படம் எடுக்கிறப்போ உங்களுக்குத் தெரியப்படுத்துறேன். போதுமோல்லியோ, சரி...வாங்க பிறகு பார்க்கலாம்'' என்று அந்தப் படாதிபதி கைகளைத் தோளுக்கு மேல் உயர்த்திக் கும்பிடு போட்டார். அதற்குமேல் அங்கே நிற்கப் பிரியப்படாத இளங்கோ அவரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

கோடம்பாக்கத்திலிருந்து கால் நடையாகவே புறப்பட்டு 'பிராட்வே'க்கு வந்தான். நல்ல உச்சி வேளை. சாலை நெருப்பாகத் தகித்துக் கொண்டிருந்தது.

'தொண்டன் பதிப்பக' உரிமையாளர் ஆபீசிலேயே இருந்தார். இருவரும் புத்தக வெளியீடு பற்றி நீண்ட நேரம் பேசினர். இறுதியில் இருவருக்கும் எப்படியோ ஒப்பந்தம் ஏற்பட்டது. இளங்கோவுக்கு அப்போதிருந்த பண நெருக்கடியில் ஐம்பது ரூபாய் கொடுத்தால் கூட, தன் கவிதைகளை விற்று விடத் தயாராக இருந்தான்.

பதிப்பகத்தார் அனுபவம் மிக்கவர். ஏழை எழுத்தாளர்களின் குருதியை எப்படி அடியோடு ஒட்ட உறிஞ்சுவது என்ற சூட்சுமம் அவருக்குத் தெரியும். சமயம் பார்த்துப் பணத்தை நீட்டி எழுதிவைத்த பிரதிகளைத் தம்முடைய தாக்கிக் கொள்ளும் திறமை அவருக்கு உண்டு. ''கவி எழுதுபவன், கதை எழுதுபவன் எல்லாமே பாதிக் கிறுக்குகள், ஒரு மாதிரியான டைப்புகள், கொஞ்சம் 'ஜில்' பண்ணிவிட்டா காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம்'' என்பதுதான் அவரது அபிப்ராயம்.

இளங்கோவின் பெயர் பிரபலமாயிருக்கும் இந்தக் காலகட்டத்தில் அவனது புத்தகத்தை வெளியிடுவதன் மூலம் நிச்சயம் லாபம் கிடைக்காமல் போகாது என்ற உண்மையை அவர் அறிந்து வைத்திருந்தார். எனவேதான் அவர் இளங்கோவுக்கு உதவி செய்யவும் முன் வந்தார்.

பதிப்பகத்தார் தன் தொழில் முறையைக் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் ''கவிஞர் சார்! எனக்கு இப்ப கவிதைப் புஸ்தகம் போடணும்னு கட்டாயம் இல்லே....உங்களுக்காகத்தான் ஒத்துக்கறேன். உங்க கவிதையை வெளியிட்டு நாலு வருஷம் கழிச்சிச் சம்பாதிக்கிற பணத்தை, ஒரு மஞ்சள் புஸ்தகம் போட்டு ஒரு வாரத்திலே போட்ட பணத்தைப் பார்த்திடுவேன். இப்ப எவன்சார் கவிதை படிக்கிறான்'' என்றார்.

இளங்கோ சற்று கோபமாக ''சார்! உங்களை வற்புறுத்தவில்லை. விரும்பினால் வெளியிடுங்கள்; இல்லாவிட்டால் வேண்டாம். இலக்கியத்தை விமர்சனம் செய்கிற தகுதி வெளியீட்டாளர்க்குக் கிடையாது.'' என்றான்.

பதிப்பகத்தார் 'இந்தக் கவிகளே பாதிக் கிறுக்குகள்' என்று மனத்தில் நினைத்துக் கொண்டு ''சார்...நீங்க என்னைப் புரிஞ்சிக்கலே...நான் பொதுவாத்தான் பேசறேன்... உங்க கவிதைகளைப் பற்றி நான் அபிப்ராயம் சொல்றதா நினைச்சுக்க வேண்டாம். உங்க பாட்டுக்கள் ஒலிக்காத மூலை முடுக்கு தமிழ் நாட்டில் உண்டா...? எனக்குத் தெரியாதா என்ன?'' என்று சுற்றி வளைத்துச் சமாதானப் படுத்தினார்.

''நானும் பொதுவாகத்தான் சொல்கிறேன். நான் விளம்பரத்துக்காக எழுதுபவனும் அல்ல; வியாபாரத்துக்காக எழுதுபவனும் அல்ல. இன்னும் சரியாகச் சொல்லப் போனால் நான் யாருக்காகவுமே கவிதைகள் எழுதுவதில்லை. எனக்காகத்தான் எழுதிக் கொள்கிறேன். மனைவியோடு புணர்வது சொந்த இன்பத்திற்காகத்தான்; நான் கவிதைகள் எழுதுவதும் என் மன மகிழ்ச்சிக்காகத்தான். உடம்பிலே அரிப்பு ஏற்படும் போது சொறிந்து கொள்வது போல, எண்ணத்திலே அரிப்பு ஏற்படுகிறபோது எழுதுகிறேன். சும்மா இருக்கிறபோதே சொறிந்து சொறிந்து உடம்பைப் புண்ணாக்கிக் கொள்கிற புத்தி எனக்குக் கிடையாது. நீங்க இதை ஞாபகம் வச்சிகிட்டு என் புஸ்தகத்தைப் பிரசுரிச்சா போதும்.''

''கவிஞர் ஐயா...நான் ஏதோ உங்களைத் தாழ்த்திப் பேசிட்டதா நீங்க நினைச்சிப் பேசறீங்க. அப்படி இல்லே...நான் கவிஞர்களைத் தெய்வமா மதிக்கிறவன். சாக்ஷாத் பிரம்மாவே பண்ற படைப்புக் கூட அழிஞ்சி போயிடுது. கவிஞன் படைக்கிறது யுக யுகாந்திரமானாலும் அழியறது இல்லே. நான் புஸ்தகம் வெளியிடுகின்ற புனிதமான தொண்டை ஏற்று நடத்திகிட்டு இருக்கிறதுக்கும் இதுதான் காரணம்.''

''...நாம் ஏன் வீண் விவாதம் பண்ணிக் கணும். விட்டுத்தள்ளுங்க. எனக்கு இப்ப பணம் தேவை. முதல்லே நூறு ரூபாய் கொடுங்க'' என்று கேட்டான் இளங்கோ.

பதிப்பகத்தார் பெட்டியைத் திறந்து நூறு ரூபாய்களை எண்ணிக் கொடுத்தார். அதை மிக அலட்சியமாக வாங்கிப் பையில் திணித் துக்கொண்ட இளங்கோ விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான்.

'ஏ! டாக்சி...''

டாக்சி நின்றது; இளங்கோ அதில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

''எங்கே சார் போகணும்.'' டிரைவர் கேட்டான்.

''நேரே பாருக்குப் போ.''

டாக்சி 'பாரில்' நின்றது. உயர்ரகமான நல்ல சீமைச் சரக்காகப் பார்த்து நான்கு 'ஒயின்' புட்டிகளை வாங்கிக்கொண்டு இளங்கோ மீண்டும் டாக்சியில் ஏறி உட் கார்ந்து ''நேராக மயிலாப்பூருக்குப் போ, தில்லானா மோகனும்பாள் வீட்டில் கொண்டு போய் நிறுத்து'' என்று உத்தரவிட்டான்.

மோகனும்பாளின் வீட்டு வாசலில் டாக்சி வந்து நின்றபோது அந்த டாக்சியைத் தொடர்ந்து வந்த மற்றென்றும் அங்கு நின் றது. டாச்சியிலிருந்து தொண்டன் பதிப் பகத்துப் பையன் ஒருவன் இறங்கி, ''கவி ஞர் சார்! எங்க முதலாளி இதை உங்களிடத் திலே கொடுத்திட்டு வரச் சொன்னுங்க'' என்ருன்.

''நான் இங்கேதான் வர்ரேண்ணு உங்க முதலாளிக்கு எவன் சொன்னுன்.''

''இல்லிங்க, நன் உங்க டாக்சியைப் பிடிச்சிடணும்னுதான் வேகமா வந்தேன், முடியலே. நீங்க வண்டியிலே புறப்பட்டு பத்து நிமிஷத்துக்கெல்லாம் நானும் புறப்பட் டுட்டேன்.''

இளங்கோ கடிதத்தைப் பார்த்தான். 'கவி ஞர் இளங்கோ C/o வாணி ஸ்டுடியோ, சென்னை' என்று எழுதி இருந்தது.

''சரி, இந்த லெட்டர் உங்க முதலாளி கையிலே எப்படி கிடைச்சுது?''

''வாணி ஸ்டுடியோ முதலாளி இங்கே வந்திருந்தார். அப்ப உங்களைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்ப அவரு இந்த லெட் டரைக் கொடுத்து கவிஞர் கிட்டே கொடுத் துடுங்கண்ணு சொன்னர். எங்க ஐயா இதை வாங்கி என் கையிலே கொடுத்து 'டாக்சியிலேயே போயி அவரைக் கண்டு புடிச்சி கையோடே சேர்த்துட்டு வா'' என்று சொல்லி அனுப்பிச்சார். நான் வந் தேன்'' என்ருன்.

இளங்கோ ''சரிப்பா......ரொம்ப நன்றி; இனி நீ போகலாம்'' என்ருன்.

பையன் விடைபெற்றுக் கொண்டான்: இளங்கோ கடிதத்தைப் பிரித்தான். பெல் லாரிச் சிறையிலிருந்து நந்தன்தான் அந்தக் கடிதத்தை எழுதி இருந்தான். கடிதத்தில் அவனது கையெழுத்து முத்து முத்தாக திகழ்ந்தன.

## 26

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்
டொன்ருகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—
ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும்
நிற்கும்... —நல்வழி

நீரலைகளில் கலந்த எண்ணெய் மிக வேக மாகப் பரவுவது போல எழில்மதி திருமணம் செய்துகொள்ள மறுத்துவிட்டாள் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவி விட்டதும், அதன் காரணமாக வெளியே தலைகாட்ட முடி யாமல் மெய்யப்பர் தவித்துக் கொண்டிருந் ததும் சென்னையிலே இருந்த எழில்மதிக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஊருக்குச் சென்ற மெய்யப்பர் தன் எண்ணங்களையெல் லாம் விவரித்து ஒரு நீண்ட கடிதத்தை எழுதி இருந்தார். 'நீ நந்தனை விரும்பு கிருய், என்ற செய்தியை முன்பே தெரிவித் திருந்தால் கூட நான் சம்மதித்திருப்பேன். திருமணப் பேச்சே முறிந்து அந்தத் திட் டமே கைவிடப்பட்டு விட்டது. இனிமேல் விடுபட்டுப் போன அந்த ஒன்றைத் தொடர எனக்குப் பிரியம் இல்லை. உன்னை ஈன் றெடுத்த ஆருவது மாதத்திலேயே உன்னை யும் என்னையும் அனுதரவாக விட்டு விட்டு இந்த உலகத்திலிருந்தே உன் தாய் விடை

பெற்றுக் கொண்ட பிறகு, இதுநாள் வரை நான் உனக்காகவே வாழ்ந்து வந்தேன். என் வாழ்வின் நம்பிக்கையாக நீ இருந்தாய். உன் எதிர்காலத்தைப் பற்றி நான் எத்தனையோ விதமான கனவுகளைக் கண்டேன். ஆனால் இனி நான் உலகத்திலே வாழ்வதற்கு எதுவுமே பிடிப்பு இல்லாததுபோல் ஆகிவிட்டது. 'இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று நிர்ணயிக்கப்பட்டு விட்ட ஈஸ்வர சங்கற்பத்தை மனித முயற்சி கொண்டு மாற்றிவிட முடியாது என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. பட்டு வாத்தியார் அங்கே உன்னைக் காண வருவார். எஞ்சியவற்றை அவர் மூலம் தெரிந்துகொள்' என்று கடிதத்திலே கண்டிருந்தது.

கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது போலவே அடுத்து ஒரு வாரத்திற்குள் சுவாமி மலையிலிருந்து பட்டு வாத்தியாரும் வந்து சேர்ந்தார்.

''எழில்மதி......நீ சங்கீத உலகத்திலே துருவ நக்ஷத்திரமாகப் பிரகாசிப்பாய் என்ற நம்பிக்கையில் என் வித்தைகளை எல்லாம் உனக்குக் கற்றுக் கொடுத்தேன். எனக்குப் பிறகு என் பெயரை நிலை நிறுத்த ஓர் அற்புதமான சிஷ்யையை நான் உருவாக்கி விட்டேன் என்று பெருமைப் பட்டுக் கொண்டேன். நான் வாழை மரமாகவும், ஆலமரமாகவும் வாழ நினைத்தேன். நீயோ கன்றுகவும், விழுதாகவும் ஆக மறுக்கிறாய். சர்வ லோகமும் புகழக்கூடிய அளவுக்குத் திறமை பெற்ற ஒரு கலாவாணியைத் தன் மகளாகப் பெற்றிருக்கிறோமே என்று உன் தந்தையும் பூரித்து இருந்தார். இப்படி எல்லோருடைய ஆசைகளையுமே அடியோடு தரை மட்டமாக்கி விட்டு நீ ஒரு துறவியைப்போல வாழ நினைப்பது சரியில்லையம்மா...உனக்கு நான் ஆசிரியன் என்ற முறையில் அறிவுரை கூறக் கடமைப்பட்டவன். அந்த உரிமையோடு தான் சொல்கிறேன். உன் தந்தையின் விருப்பப்படித் திருமணம் செய்துகொண்டு கலை உலகப் பறவையாக வாழ்வயாக''என்று பட்டு வாத்தியார்எழில்மதியிடம் எடுத்துரைத்தார்.

பாகவதரையும், அவருடன் இணைபிரியாமல் இன்றுவரை இருக்கிற ஜெர்மன் சில்வர் பெட்டியையும், ஒரு லட்சிய நோக்கத்தோடு விளம்பர மற்ற வாழ்க்கை நடத்திக் கொண்டு அவர் செய்யும் தொண்டினையும், தனக்குப் பிறகு தன் சங்கீத பரம்பரையை நாட்டுக்கு விட்டு விட்டுத்தான் செல்லவேண்டும் என்ற துடிப்பையும் கண்ட எழில்மதிக்கு மனம் சற்று நெகிழ்ந்தது. தன் ஆசிரியப் பிரானின் மனம் தன் தீர்க்கமான முடிவால் கொஞ்சம் வருந்துமே என்று நினைத்தபோது அவளுக்கும் வருத்தம் எழவே செய்தது.

பட்டு வாத்தியார் மெய்யப்பரின் முடிவையும், திட்டத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

''இதைக் கேளம்மா, சங்கீதத்தில் ஆர்வமும், பற்றும் கொண்டிருக்கும் அத்தனை பேரும் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகய்யாவை சத்குருவாகப் போற்றி வணங்குவது உனக்குத் தெரியாத ஒன்றல்ல. அவரிடம் கொண்டுள்ள பக்தியையும், நன்றியுணர்ச்சியையும் தெரிவிக்கத்தான், வருஷத்திற்கு ஒரு முறை அத்தனை பேரும் திருவையாற்றிலுள்ள ஒரு மகானின் சமாதியின் முன் ஒன்று கூடி ஆத்மார்த்தமாகப் பாடி ஆராதனை செய்கிறார்கள். இந்த வருஷமும் தியாகப் பிரம்ம மகோற்சவ சபையினர் உற்சவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளனர். நீயும் ஆராதனையில் கலந்து கொள்ளப் போவதாக விளம்பரப் படுத்தி விட்டார்கள். அப்படி விளம்பரப் படுத்த நான்தான் ஒத்துக்கொண்டேன். புகழ் உன்னை நாடிவரும் போது நீ ஒதுக்குவது சரியில்லையம்மா... நீ திருவையாற்றுக்கு வந்து ரசிகப் பெருமக்களை மகிழ்வித்து அன்றைய தினமே உன் திருமணத்தையும் முடித்துக் கொள்ள வேண்டும். தியாகய்யாவின் சந்நிதியில்தான் உன்னுடைய திருமணத்தை நடத்தவேண்டும் என்பது என் ஆசை. உன் அப்பாவின் அபிப்ராயமும் அதுதான். திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. நீ வீண் பிடிவாதமாக இருப்பது சரியில்லையம்மா.?

''ஐயா...இன்னது என்று என்னால் வெளியிட்டுச் சொல்ல முடியாத ஏமாற்ற உணர்வுகளால் என் உள்ளம் நிரம்பிவிட்டது. தயவு செய்து திட்டங்களை எல்லாம் விட்டுவிட்டால் என்னை மனநிம்மதியோடு வாழ வைத்த பெருமை உங்கள் எல்லோருக்கும் வந்து சேரும். கலையும் எழிலும் என்னைப் பொறுத்தவரை வெறும் அணிகலன்கள் தான். ஆத்மாவே கருகிவிட்ட பிறகு அணிகள் எதற்காக? பிணத்திற்குப் போட்ட பூமாலையைப் போல அவையும் பயனற்றவை தானே?''

"அப்படி என்றால் உன் எதிர்காலத்தைப் பற்றி நீ என்னதான் தீர்மானித்து வைத்திருக்கிறாய். அதையாவது சொல்லம்மா..."

"இன்றைய நிலையில் நான் வெறும் கூட்டுப் புழுவாகத்தான் இருக்கிறேன். என்னிடம் இருந்து விலையுயர்ந்த பட்டு நூலும் கிடைக்கலாம். இல்லாவிட்டால் நான் புழுவாகவே இருந்தும் மடிந்து போய்விடலாம்."

"நீ கலைவாழ்வுக்கும் இல்லற வாழ்வுக்கும் ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைக்கப் போகிறாயா?"

"அழியும் இன்பத்தையும், அளவுக்கு மீறிய புகழையும் நான் என்றைக்குமே விரும்பவில்லை ஐயா. என் ஆத்மா அழியக் கூடிய அவற்றிற்காக என்றுமே ஏங்கியதில்லை. ஐயா...உங்களையும் என் தந்தையாகவே கருதி மனம் திறந்து சொல்கிறேன். என் ஆத்மா வேறொரு ஆத்மாவுக்காகத் துடித்துக்கொண்டு இருக்கிறது. அந்தத் தவிப்பில்தான் என் வாழ்க்கை பரிபூரணம் அடையவேண்டும். திருமணம் என்பது இரண்டு ஸ்தூல உடம்புகளின் சேர்க்கையல்ல. சூட்சும வடிவான இரண்டு உயிர்களின் சேர்க்கை. என் தந்தையார் முடிவு கட்டி இருக்கும் வாழ்க்கை—ஒரு வேளை, அது நிறைவேறினால்—அது உள்ளங்களின் சேர்க்கையாக இருக்காது."

"சரியம்மா... ஊர் என்ன சொல்லும்? உலகம் என்ன நினைக்கும்? நாம் அதைப் பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டுமல்லவா?"

"என்ன நினைக்கப் போகிறது, காதலுக்காக வாழ்க்கையைத் துறப்பது பைத்தியக்காரத்தனம் என்று நினைக்கும். பைத்தியக்காரத்தனம் என்பது ஒன்றின்மேல் வைக்கும் அதிகப் பற்றால் விளைவதுதான். காதலில் மட்டும்தான் அதிகப்பற்று இருக்கிறது என்பதில்லை; மதம் என்பது என்ன? அதுவும் ஒரு கொள்கையிலே வைக்கும் அதிகப் பற்றுதானே, தேசபக்தி என்பது என்ன? அதுவும் மண்ணின் மீது கொண்டிருக்கும் அதிகமான மோகம்தானே. அப்படிப் பார்த்தால் காதலுக்காகத் துறவு பூணுபவர்கள் மட்டுமல்ல—மதத்திற்காக அரச வாழ்வை துறந்த புத்தனும் பைத்தியக்காரன்; விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகச் சுக வாழ்வை இழந்து போராட்டம் நடத்தி வரும் காந்தியடிகளும் பைத்தியக்காரர். உலகமே பைத்தியக்கார ஆஸ்பத்திரிதான்."

"அம்மா... நான் உன்னோடு வாதாட முடியாது... அப்படி வாதாடினாலும் நான் வெற்றிபெற மாட்டேன். நீயோ காவியத்தில் வருகிற கண்ணகி போல—இடைக் காலத்திலே வாழ்ந்த ஆண்டாளைப் போல—கொண்ட கொள்கையினை உறுதியோடு நின்று மாறா உள்ளத்தோடு வாழ்கிறாய்" என்று கூறிய பட்டு வாத்தியார் கொஞ்ச நேரம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டவரானார். பின் "எழில்மதி... உன் முடிவை எந்த அளவுக்கு நான் வரவேற்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. மிகப் பெரிய ஆற்றல் ஒன்று எங்கே பயனின்றிக் கழிந்து விடுமோ என்றுதான் வருந்துகிறேன்" என்றார்.

"ஐயா... என் ஆத்மாவுக்கு 'வீணை வாசித்துத்தான் தீரவேண்டும்' என்ற அடக்க முடியாத ஆவல் ஏற்பட்டு விடுமானால் நானே தியாகய்யாவின் சந்நிதிக்கு வருகிறேன். அப்பாவிடம் எடுத்துக்கூறி அவர்களது திட்டத்தை விட்டுவிடுமாறு சொல்லி விடுங்கள். இதனால் அப்பாவுக்கு ஏற்படும் கௌரவ பங்கத்தை ஈடுகட்ட என் உயிரையே பலியாக ஆக்கவும் தயாராய் இருப்பதாகச் சொல்லிவிடுங்கள்."

எழில் மதியின் பேச்சில் காணப்பட்ட கண்டிப்பையும், பிடிவாதத்தையும் கண்ட பட்டு வாத்தியார் சுவாமி மலைக்கு அடுத்த நாளே புறப்பட்டுவிட்டார். மெய்யப்பர் சுவாமி மலையில் பட்டு வாத்தியாரின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தார்.

எழில் மதியின் மனம் வாலறுந்த பட்டத்தைப் போல விசையற்று ஒடுங்கியது. அவள் வீட்டை விட்டு எங்குமே வெளிச் செல்லாமல் தன் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள். மலையிலிருந்து புறப்பட்ட ஆறு எங்கேயோ ஓடி, இனியும் கடக்க வேண்டிய தூரம் இல்லை என்ற நிலையில், இறுதியில் கடலோடு கலந்து விடுவது போல அவளது நினைவுகளும் எண்ணங்களும், நந்தனைப் பற்றிய கனவுகளோடு ஐக்கியமாகி மறைந்தன. சிறிய கிளையிலே பெரிய பழம் ஒன்று 'இது காம்பு இற்று எந்த நேரத்திலேயும் கீழே விழுந்து விடலாம்' என்று சொல்லத் தக்க நிலையில் தொங்கிக் கொண்டிருப்பது

போல அவளது நினைவுகள் பெரிய சுமையாக மாறி அவளது சிறிய உயிரை அமுக்கிக் கொண்டிருந்தன.

அத்தை எழில்மதியை எவ்வளவோ தேற்றினாள். அவளோ எதையுமே காதில் வாங்காமல் நடைப் பிணமாக வீட்டில் குறுக்கும் நெடுக்குமாய் உலவிக் கொண்டிருந்தாள்.

கொல்லைப் பக்கத்திலே பூத்திருந்த முல்லைப் பூக்களைப் பறித்துச் சரமாகக் கட்டிய அத்தை ''இதைத் தலையிலே வைத்துக் கொள்'' என்று கூறி மேஜை மீது வைத்து விட்டுப் போனாள். அப்பூச்சரம் நீண்ட நேரமாக அப்படியே கிடந்ததால் வாடிப் போய் இருந்தது. இப்பூக்களும் தன்னைப் போலவே எதையோ நினைத்து ஏங்கிப் போய் வாடி விட்டதோ என்ற உணர்வு எழில் மதிக்கு எழுந்தது.

திருவையாற்றில் தியாகப் பிரம்ம உற்சவத்தில் தன் வருகைக்காகத் தமிழ்நாட்டு ரசிகர்கள் கூட்டம் காத்துக் கிடக்கும் என்ற பெருமைக்குரிய உணர்ச்சி, நந்தனைப் பற்றிய காதல் நினைவுகளின் முன், மிக மிக அற்பமாகத் தோன்றி அடியோடு தேய்ந்து விட்டது. காதலின் முன்னே பெருமித உணர்வுகள் தோற்றுப் போகும் நுட்பத்தை அவள் உணர்ந்தாள். நன்றாக ஆழ்ந்து தூங்கி விடாமலும், நன்றாக விழித்துக் கொண்டு இருக்காமலும் இடைப்பட்ட நிலையில் மனத்தின் பசியைப் போக்கும் ஆசை நினைவுகளை வளர்த்துக்கொண்டே அதற்குள் அமிழ்ந்துவிட்டால் அதுவே போதும் என்று எழில்மதியின் மனம் எண்ணியது.

ஈன்றெடுத்த தந்தைக்காகத் தன் எண்ணங்களையெல்லாம் மாற்றிக்கொண்டு புதுப் பிறவி எடுக்க முடியுமா என்று கூடப் பாசத்தின் வயப்பட்ட அவள் எண்ணிப் பார்த்தாள். வானத்திலிருந்து விழுந்த விண்மீன் மீண்டும் வானத்திற்கே சென்றுவிடுவதில்லை. மாலையாகக் கோக்கப்பட்டு விட்ட முத்து மீண்டும் சிப்பியின் வயிற்றுக்குள் செல்வதில்லை. ஒருவனுக்கே அடிமையாகிவிட்ட தன் காதல்மனம் இனி வேறொன்றை நினைத்து மாறுவது என்பது முடியாது என்பதை உணர்ந்தாள்.

எழில்மதி சரியாக உணவருந்தி ஏழெட்டு நாட்கள் ஆயின. மெய்யப்பரிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை.

அன்றைக்குச் சென்னையில் இளங்கோவின் கவிதை வெளியீட்டு விழா, பேராசிரியர் அம்பலவாணர் தலைமையில் நடந்ததாக வந்த செய்தியையும் அம்பலவாணரது பேச்சையும் எழில்மதி செய்தித்தாளில் படித்துத் தெரிந்து கொண்டாள். ''ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு தோன்றி இருக்கிற ஒரே கவிஞன்—மிகச் சிறந்த கவிஞன் இளங்கோதான் என்பது என் கருத்து'' என்று அம்பலவாணர் பேசி இருந்தார். விழாவில் கலந்துகொண்டு பாராட்டு தெரிவித்த பிற அறிஞர்களும் ஏகோபித்த நிலையில் ஒரேயடியாகப் பாராட்டி இருந்தனர். செய்தித் தாளைப் படித்த எழில்மதி 'இளங்கோ மனிதன் அடைய வேண்டிய புகழின் உச்சியைத் தொட்டுவிட்டார்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். கடற்கரையில் அவளைச் சந்தித்து அவன் பேசி விட்டுப்போன உருக்கமான நிகழ்ச்சியை அவள் எண்ணினாள். தான் நினைத்து ஏங்குவதற்கு நந்தன் காரணமாக இருப்பது போல, இளங்கோ நினைத்து ஏங்குவதற்குத் தான் காரணமாக இருப்பதை உணர்ந்தாள். உலகத்தில் உள்ள ஒவ்வொரு உயிரும் இப்படித்தான் ஏங்குவதும் ஏங்கச் செய்வதுமாக இருக்குமோ என்று எண்ணிக்கொண்டாள்.

''எல்லாம் வல்ல இறைவா, குழம்பிக் கிடக்கும் என் மனத்தில், தெளிவான சிந்தனையைக் கொடு; ஆரவாரம் நிறைந்த இந்த உலகத்தில் என்னை அமைதியாக வாழ விடு. எனக்குப் பொன் வேண்டாம்; பொருள் வேண்டாம்; புகழ் வேண்டாம்; புவியிலுள்ள போகங்கள் வேண்டாம். என் அன்பரோடு சேர்ந்து வாழவேண்டும். இல்லாவிட்டால் அவரது நினைவுகளிலேயே வாழ்ந்து அவரை எண்ணியே மண்ணோடு மண்ணாக மடிந்து விடவேண்டும்.

எழில்மதி இறைவனைப் பலவாறாக வேண்டிக்கொண்டாள்: அவள் மனம் அந்த நேரத்தில் அமைதியை நாடித் தவித்தது. அப்பொழுதுதான் அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று அவள் செவியில் விழுந்தது.

*''நந்தன் மறைந்துவிட்டான்.''*

# 27

''மோப்பக் குழையும் அனிச்சம்''

—திருக்குறள்

*பெல்லாரிச் சிறையில் கைதியாக இருந்த* நந்தன் 'வந்தே மாதரம் எனச் சொல்லக் கூடாது' என்ற தடை உத்தரவை மீறிப் போலிசாரின் தாக்குதலுக்கு ஆளாகி மடிந்து விட்டான் என்ற செய்தி பாரத நாட்டின் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகி இருந்தது. பிரபலமான பத்திரிக்கைகள் சில அவனது வாழ்க்கைக் குறிப்புக்களையும் வெளியிட்டு, ஈடு செய்ய முடியாத இழப்பு எனக் கொட்டை எழுத்துக்களில் தலையங் கங்கள் எழுதி அஞ்சலி செலுத்தி இருந்தன. அண்ணல் காந்தியடிகளும், பண்டித நேரு வும் நவ காளியில் பேசும் போது ஒரு கூட்டத்தில் 'அண்மையில் மறைந்து விட்ட தமிழ்நாட்டு இளைஞர் நந்தன் பாரதத்தின் வாலிபர்களுக்கு ஒரு ஆதர்சமாகத் திகழ் கிருர். இன்றைய பாரதத்திற்கு நந்தனைப் போன்ற வாலிபர்கள்தான் தேவை. அத்த கையவர்களால்தான் பாரதத் தாயின் அடிமை விலங்கை உடைத்து எறிய முடி யும்'' என்று பேசினர்.

நந்தனின் மறைவை நினைத்தபோது இளங் கோவுக்கு மனம் தடுமாறியது. பாரத நாட் டின் பெருமதிப்புக்கும், வணக்கத்திற்கும் உரியவனுகி விட்ட நந்தன் தன்னுடைய நண்பனல்லவா என்று நினைக்கிறபோது பெருமித உணர்வு எழுந்தது. ஆனுல் அவ னது அடிமனம் 'நீ அவ்வாறு பெருமைப் பட்டுக் கொள்ள உரிமை இல்லாதவன்' என்று இடித்துக் கூறுவது போல இருந்தது.

கவிதை வெளியீட்டு விழா நடந்து சில நாட்களே ஆகி இருந்தன. தமிழ் நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்து முகம் தெரியாத பலர் பாராட்டுக் கடிதம் எழுதிக் கொண்டே இருந்தனர். புத்தகம் வெளிவந்து ஒரு வாரம் முடிவதற்குள்ளாகவே முதற்பதிப்பாக வெளியிட்ட இரண்டாயிரம் படிகளும் இருந்த இடம் தெரியாமல் விற்பனை ஆகி விட்டன. இளங்கோவின் உடல் நிலையோ மிக மோசமாகி இருந்தன. கொஞ்சம் கொஞ்சமாக அவனை உருக்கிக் கொண்டி ருந்த க்ஷயம் அவனை எந்த நேரத்திலும் தின்றுவிடத் தயாராக இருந்தது. ஒரு தனி யாரின் மருத்துவ விடுதியில் அவன் தங்கி சிகிச்சை பெற்று வந்தான்.

இளங்கோ நந்தன் தனக்கு எழுதியிருந்த கடிதத்தைப் பன்முறை திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருந்தான்.

''இளங்கோ, நீ மிக நல்லவன்; சிறந்த கலைஞன். ஆனுல் உன்னிடத்திலே நான் கண்ட குறைபாடு நீ திட்பம் இல்லாத நெஞ் சும், மாறி அலையும் மனமும் படைத்தவனுக இருப்பதுதான். உனக்குத் தெளிந்த சிந் தனையையும், அமைதியான மனத்தையும் ஆண்டவன் கொடுப்பானுக. சற்று தெளி வாகச் சொல்லப் போனுல் நீ ஒரு அனிச்சப் பூவைப் போன்றவன். அனிச்சப்பூ மிக மென்மையானது; முகர்ந்தாலே வாடிவிடக் கூடியது. மென்மையான மனம் கலைஞனுக் குத் தேவைதான். மென்மையில்தான் கலை உருவாகிறது என்பதும் உண்மைதான். ஆனுல் மென்மையான மனமே அவனது அழிவுக்குக் காரணமாக இருந்துவிடக் கூடாது. கலைஞனுக்கு உணர்ச்சிகள் தேவை. ஆனுல் அந்த உணர்ச்சியில் அவனே கருகிவிடக் கூடாது. உனது மனம் மோப்பக் குழையும் அனிச்சமாகத்தான் இருக்கிறது. பெற்றிருக்கிற உணர்ச்சியான மனத்தைப் பண்படுத்திக் கொண்டு வாழா விட்டால் அது அனிச்சப்பூவைப் போலத் தான் ஆகிவிடும்.''

*இளங்கோவின் கண்களிலிருந்து கண்ணீர்* 'பொல' 'பொல' வென்று விழுந்தன. தன் கவிதைத் தொகுதிக்கு அவன் 'அனிச்சப்பூ' என்று பெயரிட்டதுகூட நந்தனின் கருத்துப் பட பொருத்தம்தானே என்று எண்ணினுன்.

''நண்பா, நானும் மனிதனுக்குரிய சபல சுபாவத்தால் பிழைகள் புரிந்திருக்கிறேன். கடைசிக் கட்டமாக உன்னையும் ஐயுற்றேன்; எழில்மதியையும் புறக்கணித்தேன்; உண் மையில் நீங்கள் இருவருமே குற்றமற்றவர் கள். உண்மையில் நான்தான் குற்ற வாளி...... எழில்மதி என் நெஞ்சில் நீங்காத நினைவாகப் பதிந்து விட்டாள். நான் அவளை அடியோடு புறக்கணித்து விட்டதாக நினைத்து வருந்திக் கொண்டிருப்பாள். ஆத் திர உணர்ச்சியில் அவள் காதலை நான் புரிந்து கொள்ளாதவனுக இருந்தேன்,

உண்மைதான். நீ எழில்மதியின் மீது அன்புடையவன் என்பதையும் நான் அறிவேன். அழுக்கு இல்லாத அன்பிற்கு ஆண், பெண் என்ற வித்தியாசம் இல்லை. தூய்மையான உன் அன்பை எழில்மதி ஏற்றுக் கொள்வதிலே தவறு இருப்பதாக என்க்குத் தெரியவில்லை......''

இளங்கோ நந்தனின் உள்ளப் பண்பாட்டை வியந்து போற்றினன். நந்தன் எழுதி இருந்த ஒவ்வொரு வரிகளும் அவனது நெஞ்சத்தில் கவிந்திருந்த இருட்டை நோக்குகின்ற விளக்காக இருந்தன.

''நான் உன் நட்பைப் போற்றுகிறேன்: எழில்மதியின் காதலை ஏற்கிறேன். நீங்கள் இருவருமே என் நெஞ்சில் இடம் பெற்றவர்கள்...... நண்பா, ஒரே ஒரு வேண்டுகோள். நீ எப்படியாவது எழில்மதியைத் தேடிக் கண்டு பிடித்து அவளிடத்திலே இந்தக் கடிதத்தைக் காட்டு. அவள் எங்கிருக்கிருள் என்பதே எனக்குத் தெரியாது. அவள் இந்தக் கடிதத்தைப் படிக்க நேர்ந்தால் மனம் அமைதி அடைவாள். இதுதான் நீ எனக்குச் செய்யும் பேருதவி......''

இளங்கோ தேம்பித் தேம்பி அழுதான்.

''நண்பா, நீ பெரிய கவிஞனுக ஆகி பேரும் புகழும் பெற்று வருவதை நான் எண்ணி எண்ணி மகிழ்கிறேன். நீ பாடிய சினிமாப் பாடல் ஒன்றைக் கூட நான் இசைத்தட்டிலே கேட்டு மகிழ்ந்தேன். உன் புகழ் நெடிது வளர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நான் விரைவிலேயே விடுதலை அடைந்து விடுவேன்''

கடிதத்தை உறைக்குள் மடித்து வைத்து விட்டு இளங்கோ படுக்கையில் சாய்ந்தான்.

'நந்தா, நான் விரைவிலேயே விடுதலை அடைந்து விடுவேன் என்று எழுதினுயே. எதை நினைத்தடா எழுதினுய். நீ ஒரேயடியாக விடுதலையாகி விட்டாயே...... உன் பாதத்திலே படிந்திருக்கும் தூசுக்குக் கூட நான் சமம் ஆக மாட்டேனடா நந்தா...... இந்தப் பாவியின் முகத்தில் மீண்டும் விழிக்கக் கூடாது என்று எண்ணிக் கொண்டுதான் இறந்துவிட்டாயா...''

இளங்கோவின் அடிமனம் புலம்பிக் கொண்டே இருந்தது. குடந்தையில் படித்து வந்த நாட்களில் நந்தன் தன் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு உதவி செய்து அன்பு காட்டியதெல்லாம் ஒவ்வொரு நிகழ்ச்சிகளாக நினைவில் தோன்றி மறைந்தன. அந்தத் தூய பேரன்புக்கு தான் தகுதி இல்லாதவனுக ஆகிவிட்டது போன்ற உணர்வு எழுந்தபோது, தான் மிகச் சிறியவனுக இருப்பதை அறிந்தான்.

''எழில்மதி திருவல்லிக்கேணியில்தான் இருப்பாள். துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு என்று சொன்னதாகத்தான் நினைவு. இப்பொழுதே போய் இந்தக் கடிதத்தை அவளிடம் சேர்த்துவிட்டு வரவேண்டும். கடிதம் கிடைத்து ஒரு வாரம் ஆகிறதே. எனக்கிருந்த பரபரப்பிலும் போலி ஆரவாரத்தில் இருந்த மோகத்தாலும் இந்தக் கடிதத்தை அப்படியே மறந்து போட்டு விட்டேனே. இந்தக் கடிதத்தைக் கிடைத்த அன்றே சேர்த்திருந்தாலும் எழில்மதி ஒரு வேளை ஆறுதல் பெற்றிருப்பாள். நந்தன் மறைந்துவிட்ட நிலையில் அவள் இந்தக் கடிதத்தைப் பார்க்க நேர்ந்தால் இன்னும் அதிகமாகத்தானே துன்புறுவாள்...... நான் சுத்த மடையன் ஆகிவிட்டேன்... நந்தனின் வேண்டுகோளை நாம் தட்டக் கூடாது. நந்தனின் கடிதத்தையும் கொடுத்து, நம் கவிதைத் தொகுதியையும் அவளது பாதங்களுக்குச் சமர்ப்பணம் செய்து விட்டு வருவோம்'' என்ற முடிவுக்கு வந்தவனுகப் புறப்பட்டான். ''நீங்கள் எங்குமே போகக் கூடாது. உடல் அசைவே கூடாது'' என்று டாக்டர் எச்சரிக்கை செய்திருந்தது நினைவில் எழுந்தது. என்றுலும் அவன் அதைப் பற்றி கவலைப்படவில்லை. பெரிய சால்வை ஒன்றை எடுத்துப் போர்த்திக் கொண்டு எழுந்தான்.

அது விடிகிற நேரம். கிழக்கு வெளுத்திருந்தது.

இளங்கோ திருவல்லிக்கேணியை நோக்கி நடந்து கொண்டிருந்தான். மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. கால்கள் தள்ளாடின.

நந்தனின் மறைவுச் செய்தியைக் கேட்ட அந்த நேரத்திலேயே எழில்மதி அமைதியாக எழுந்து சென்று கண்ணுடியின் முன் நின்ருள். நெற்றியில் இருந்த திலகத்தைத்

தன் கையால் துடைத்து அழித்தாள். கழுத்திலே கிடந்த ஆரங்களை எடுத்துத் தனியாக வைத்தாள். கை வளையல்களை உடைத்து நீக்கினுள். நேராகப் பார்த்தசாரதி கோயிலுக்குச் சென்று குளத்தில் நீராடி விட்டு, சுவாமியையும் தரிசித்து மீண்டாள். அத்தை உடுத்தி இருந்ததுபோல் வெண்ணிறச் சேலை ஒன்றை உடுத்திக் கொண்டாள்.

வெள்ளை உடையோடு, விதவைக் கோலத்தில் இருந்த எழில்மதி நந்தனின் படத்தைச் சுவரின் மீது மாட்டி எதிரே விளக்கேற்றி வைத்தாள். மலர்ந்த பூக்களைத் தானே பறித்து வந்து மாலையாகக் கட்டிப் படத்திற்குச் சாத்தி வைத்தாள்.

அத்தை பதறித் துடித்தாள்; ஊருக்குச் செய்தி பறந்தது. மெய்யப்பர் அலறித் துடித்துக் கொண்டு ஓடி வந்தார்.

''அடி, பாவி மகளே, என்னடி இந்தக் கோலம் செய்துவிட்டாய்'' என்று மெய்யப்பர் பொங்கிக் குமுறினுர்.

''அப்பா, என்னை மன்னித்து விடுங்கள் அப்பா. நான் யாரை மானசீகமாக மனத்தில் வரித்து இருந்தேனே, அவர் இந்த உலகத்தை விட்டுப் போய்விட்டார். என் அன்பர் மறைவுக்குப் பிறகு நான் விதவைதான். ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் இந்தத் தமிழ் மண்ணிலே பல்லாண்டுக் காலமாக ஊறிவந்திருக்கிற பண்பாடு. என் வாழ்விலும் போக்கிலும் தயவு செய்து குறுக்கிடாதீர்கள். என் அன்பரின் நினைவிலேயே நான் வாழ்ந்து மடிந்து விடுகிறேன்''

எழில்மதியின் முடிவைக் கண்ட மெய்யப்பர் சிலையானுர்.

துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவை இளங்கோ அடைகிறபோது பொழுது பாதி விடிந்ததும் விடியாததுமாக இருந்தது. பார்த்தசாரதி கோயிலில் இருந்து முழக்கம் எதிரொலித்துக் கொண்டிருந்தது. தீராத வினைகளையெல்லாம் தீர்த்து வைக்கின்ற திருமாலே! திருவேங்கடவா, நீ கோயில் கொண்டிருக்கும் திருமலையில் நான் ஒரு படியாக வேனும் கிடந்து உன் பவளச் செவ்வாயைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்' என்ற பொருள்பட குலசேகரர் பாடியிருக்கும் பாடல் ஒன்றைப் பக்தர் ஒருவர் பாடிக் கொண்டு சென்றதை இளங்கோ கேட்டான். அந்தப் பாட்டைக் கேட்ட மாத்திரத்திலேயே அவனது நெஞ்சம் தூய்மையால் நிறைவது போல உணர்ந்தான்.

தூரத்திலே ஒரு பெண் குளித்துவிட்டு ஈர சடையோடு குளிரில் நடுங்கியவாறு செல்வதைக் கண்ட இளங்கோவுக்கு அப்பெண்ணைத் தான் எங்கேயோ பார்த்தது போன்ற எண்ணம் எழுந்தது. இளங்கோ யோசித்தான்.

''ஆம்! அதே நடை, அதே சாயல், அதே மென்மை, அவளேதான், எழில்மதிதான்... இது என்ன வெண்ணிற ஆடை.... தலையில் முக்காடு வேறு போட்டிருக்கிருளே...''

இளங்கோ நடையைச் சற்று வேகமாக்கினுன். கால்கள் பின்னிக் கொண்டன. நெஞ்சுவலி வேறு; பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

அப்பெண் எந்த வீட்டுக்குள் சென்று நுழைந்தாளோ அந்த வீட்டை நினைவில் வைத்துக் கொண்டான். அவன் எழில்மதியின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து விட்டான்.

தள்ளாடித் தள்ளாடி அந்த வீட்டை நெருங்கிய இளங்கோ தாழ்வாரத் தூணைப் பிடித்துக் கொண்டு திறந்திருந்த வெளிப் புறத்துச் சன்னல் வழியாக உள்ளே நோக்கினுன்.

வெள்ளைக் கலையுடுத்திய எழில்மதி நந்தனின் படத்திற்கு மாலையைப் போட்டு வணங்கிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் குத்து விளக்கு சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த ஒளியில் எழில்மதியின் முகம் எந்தவிதமான சலனமும் இல்லாமல் சாந்தமாகத் திகழ்வதை இளங்கோ கண்டான்.

''எழில்மதி... ..எழில்மதி... ..''

அவள் திடுக்கிட்டு நோக்கினுள்.

இளங்கோ தாழ்வாரத்திலிருந்து படியில் காலை வைத்து திண்ணைக்கு வந்தான் 'சட்'டெனக் கால் இடறியது. தடுக்கி வீழ்ந்தான். வாசற்படியில் மண்டை மோதி ரத்த

வெள்ளம் 'குபு குபு' என்று கொட்டியது. அவன் மயங்கி விழுந்தான்.

கதவைத் திறந்து கொண்டு ஓடிவந்த எழில்மதி இளங்கோவின் நிலையைக் கண்டாள். அவன் குருதி வெள்ளத்தில் கிடப்பதையும், விழிகள் நான்கு புறமும் எதையோ தேடுவது போலப் பிறழ்வதனையும் கண்டு 'இளங்கோ—இளங்கோ' என அலறினாள்.

அவன் விழிகளைப் புரட்டி நோக்கித் 'தண்ணீர் வேண்டும்' என்று சைகை காட்டினான். உள்ளே ஓடிப்போய் குவளையில் தண்ணீர் வார்த்துக் கொண்டு ஓடிவந்தாள் எழில்மதி.

தண்ணீரை இரண்டு மிடறுகள் குடித்துவிட்டுக் குவளையைக் கீழே வைத்தான். நெற்றியில் வழிந்த ரத்தத்தைத் தன் மேல் போர்வையால் துடைத்துக் கொண்டான். மூச்சு இழுப்பு வேகமாக இருந்தது. கடிதத்தை அவளிடம் நீட்டிப் ''படித்துப் பார்'' என்றான். இருமினான்; காறி உமிழ்ந்தான். தொண்டையிலிருந்து உறைந்து போன இரத்தக் கட்டிகள் வந்து விழுந்தன.

எழில்மதி கடிதத்தைப் படித்தாள். அடுத்த கணம் தொடர்ந்து வந்த இருமலால் அவஸ்தைப் படும் இளங்கோவைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தாள்.

இளங்கோ கக்கத்தில் இடுக்கி வைத்திருந்த தன் கவிதை நூலை எடுத்தான். ''எழில்மதி, இதோ...என் கவிதை நூல்—அனிச்சப்பூ...என்று பெயர் வைத்திருக்கிறேன். உனக்குத்தான் சமர்ப்பணம் செய்திருக்கிறேன். என்னைக் கவிஞனாக்கியது நீ தான். நீ மானிடப் பெண் அல்ல. தெய்வப் பெண்......'' அவன் பேச முடியாமல் திணறினான். வார்த்தைகள் குழறின.

''அனிச்சப்பூ ஒருவனுக்கே உரிய மலர், ஒருவன் மட்டும்தான் நுகர முடியும். ஒருவன் முகர்வதற்கு என்றே அனிச்சமலர் ஆண்டவனால் படைக்கப்பட்டிருக்கிறது. பெண்ணும் அனிச்சப்பூவைப் போலத்தான் இருக்க வேண்டும். ஒருவனுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் கற்புக் கடம் பெண்களுக்குத்தான் உண்டு. நீ அனிச்சப்பூவைப் போன்றவள். நீ மட்டுமல்ல, நந்தனும் அனிச்சப்பூவைப் போன்றவன் தான். அனிச்சப்பூவை பிற மலர்களைக் காண்பது போல் காண்பது அவ்வளவு எளிதல்ல. அனிச்சப்பூ இப்பொழுது எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. தேடித்தான் காணவேண்டும். நந்தனைப் போன்ற லட்சிய வீரர்கள் கோடி ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிறக்க முடியும். அவனைப் போன்ற லட்சிய ஆத்மாக்களை நிலைகெட்டுப் போன இந்த உலகத்தில் தேடிச் சென்றால் கூடப் பார்க்க முடியாது...இதோ, நூலை ஏற்றுக்கொள்.

எழில்மதி தன்னுடைய இரு கரத்தாலும் அதைப் பயபக்தியோடு வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''பெண்ணே! உன்னை மணக்கோலத்தில் காணவேண்டிய நான் இந்தக் கைம்மைக் கோலத்திலா காணவேண்டும். தலை நிறையப் பூச்சூடி, நெற்றியிலே திலகம் விளங்க அன்று நீ கடற்கரையிலே காட்சி தந்தாயே... அந்த எழில்மதியா நீ......''

''இளங்கோ... இனி யாருக்காக நான் என்னைப் புனைந்து கொள்ளவேண்டும்...... என்னுடைய எஞ்சிய நாட்கள் இந்தக் கோலத்தில் கழிந்து விடட்டும். அடுத்த பிறவியில்—எனக்குப் பிறவி உண்டு என்றால்—மானிடப் பெண்ணாக— நந்தனை அடைவதற்காகவே பிறக்க எண்ணுகிறேன்...''

''இனி நீயோ, நந்தனோ பூவுலகத்தில் பிறக்கமாட்டீர்கள். நீங்கள் தெய்வப் பிறவிகள்''

''இளங்கோ... உங்களிடத்தில் ஒன்று சொல்ல விழைகிறேன். நான் உங்கள் அன்பை நன்றாக உணர்ந்திருக்கிறேன். உங்கள் அன்பிற்கு நன்றி கூறுகிறேன். நீங்கள் வருந்தும்படியாக நான் ஏதேனும் நடந்திருந்தால் — உங்கள் துன்பத்திற்கு நான் ஏதும் காரணமாக இருந்திருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்''

மன்னிக்கப்பட வேண்டியது நீயல்ல: நான்தான். நந்தனுக்கும் உனக்கும் உள்ள காதலின் ஆழத்தை நான் புரிந்து கொள்ளாமல் உங்களுக்கு நடுவே நான் குறுக்கிட்டதைக் குற்றம் என்று உணர்கிறேன். எழில்மதி... ஆனால் நான் என்னை மாற்றிக் கொண்டு விட்டேன். நான் இப்பொழுது உன்பால் கொண்டிருக்கும் அன்பு மிக மிகப் புனிதமானது; உன்னைப் போலவே தூய்மையானது. நீ அதை ஏற்றுக் கொண்டால் அதுவே என் பாக்கியம்......எழில்மதி, நீ

இன்னும் உலகத்தில் பலகாலம் வாழ்ந்து மக்களுக்குப் பயன்பட வாழ்வாயாக... என் வேளை நெருங்கி விட்டது; சாவு என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறது...எழில்மதி... கிட்டே வா... ஒன்றே ஒன்று கேட்கிறேன்...'' அவன் தயங்கி நிறுத்தினான்.

''என்ன?'' என்றாள் அவள்.

''இன்னும் கொஞ்ச நேரத்தில் என் உயிர் போகப் போகிறது. பார்த்தாயா என் உடம்பை... இந்த எலும்புக் கூட்டுக்குள் இன்னும் என் உயிர் இருந்து கொண்டிருப்பதுதான் ஆச்சரியம். எழில்மதி... என் உயிர் என்னைவிட்டுப் பிரியப்போகும் இந்தக் கடைசி நேரத்தில் அது உன் மடியில்தான் போக வேண்டும்....''

எழில்மதி இளங்கோவின் தலையை அன்புடன் எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள்.

''நீங்கள் சாக மாட்டீர்கள்...உங்களுக்கு சாவே கிடையாது. உங்கள் உடல் மறைந்தாலும் புகழ் சாகாது'' என்றாள்.

இளங்கோ எழில்மதியின் மடியில் படுத்த படியே...''எழில்மதி கலைஞர்கள் என்பவர்கள் என்னைப் போல், உணர்ச்சிக்கு அடிமையாகாமல் உன்னைப் போல் உணர்ச்சிகளை ஆள்பவர்களாக வாழவேண்டும்......''

அவனது பேச்சு திணறியது; இருமலால் துவண்டான். அவனது விழிகள் நிலைகுத்தின.

''எழில்மதி. நந்தன் எழுதிய கடிதத்தை உன்னிடம் சேர்த்துவிட்டேன். என் கடமை முடிந்து விட்டது'' என்றான்.

அவன் தலை சாய்ந்தது. இளங்கோவின் உயிரற்ற வெறும் கூடு அவளது மடியில் கிடந்தது.

எழில்மதியின் அலறல் வீதியெல்லாம் எதிரொலித்தது.

## 28

தெய்வம் தெளிமின்! தெளிந்தோர்
பேணுமின்!

செல்லும் தேயத்துக்கு உறுதுணை
தேடுமின்!

— இளங்கோவடிகள்

காலம் உருண்டோடியது. இரவும் பகலும் வந்து கொண்டே இருந்தன. ஆறிடு மேடும் மடுவும்போல் வாழ்க்கைப் போக்கில் எத்தனையோ மாற்றங்களை காலம் உருவாக்கிக் கொண்டே போய்விட்டது.

மங்க நல்லூர்!—

அந்தச் சிற்றூரில் ''நந்தன் சிறுவர்கள் பள்ளி'' என்ற நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அதோ தெரிகிறதே! அதுதான் பள்ளி. வாருங்கள் உள்ளே போகலாம். இது என்ன? கட்டிடத்தின் முன்வாயிலில் அழகாக இரண்டு வரிகள் பொறிக்கப்பட்டுள்ளனவே! ''தெய்வத்தை நம்புங்கள்! பெரியோரைப் போற்றுங்கள். மறுமை வாழ்வு நல்லதாக அமைய இனியன செய்யுங்கள்.'' என்ன அழகிய கருத்து இது. இதுதான் எழில்மதி போற்றிப் பாராட்டிப் பரப்பி வரும் தத்துவமாம்! அதோ, அங்கே நரையும் திரையுமாக ஒரு கிழவி அமர்ந்திருக்கிறாளே, தெரிகிறதா, வெண்ணிற ஆடை, வெண்ணீறு திகழும் நெற்றி. ஆம்! அவள்தான்; அவளேதான் எழில்மதி. அவளது அமைதி தவழும் முகத்திலேகூட ஏதோ ஒரு சோகம் இழையோடுவது போலத் தெரிகிறதல்லவா? அந்தச் சோகத்தை நாம் மாற்ற முடியாது! அது காலம் பதித்துவிட்ட அழியாத சுவடுகள்.

முடிவுரை :

அன்பிற்கினிய வாசகர்களே! நான் யாருடைய கதையை எழுத நினைத்தேனோ அதை எழுதி முடித்து விட்டேன். நான் உணர்ந்தவை அதிகம்; உணர்த்தியது குறைவு. எந்த அளவுக்கு என் முயற்சியிலே நான் வெற்றி பெற்றிருக்கிறேன் என்பதற்கு நீங்கள்தான் தீர்ப்பளிக்க வேண்டும். நாவல் துறையில் இது என் முதல் முயற்சி. இந்த நாவலை எழுதியதின் மூலம் சரியாக ஒரு ஆண்டுக் காலம் உங்களோடு தொடர்புகொள்ள முடிந்தமைக்கு மகிழ்கிறேன்.

இறுதியாக ஒரு வார்த்தை —

''அனிச்சப்பூ''—மலர்ந்ததற்குக் காரணம் **ஆசிரியர், திரு. கன்னிக்கண்ணன்** அவர்களது தூண்டுதல்தான். நல்ல எழுத்தாளர்கட்கு வாய்ப்பளித்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற துடிப்பு உடையவர் அவர். இந்த நேரத்தில் 'உதயத்'தை எனது இதயமாகக் கருதி, ஆசிரியர் கன்னிக் கண்ணன் அவர்களுக்கும், வாசகர்களாகிய உங்களுக்கும் என் அன்பையும் நன்றியையும் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

—எழில்முதல்வன்

# சாயாதேவி



— கன்னிதாசன் —

**சேவகன் :**-மன்னர் மன்னருக்கு மங்களம் உண்டாகட்டும்!

**சந்திர :**-மிக்க மகிழ்ச்சி! என்ன செய்தி?

**சேவ :**-மன்னர் மன்னரே! ராஜகுரு சாணக்கிய தேவர் தங்களைக் காணவேண்டுமாம், அழைத்துவரும்படி உத்தரவு!

**சந்திர :**-யார் குருநாதரா! புறப்பட்டுவிட்டேன்! இதோ வந்து கொண்டிருப்பதாகச் சொல்! (பாஞ்சாலனைப் பார்த்து) பாஞ்சாலா! நீயும் கூட வா! குருநாதர் அழைக்கிருராம்.

(இருவரும் போகின்றனர்)

## காட்சி 4

*இடம்:- சாணக்கியரின் அறை.*
*பாத்திரங்கள்:- சாணக்கியர், சந்திரகுப்தன், பாஞ்சாலன்.*

*சந்திர :-குருநாதருக்கு என் வணக்கங்கள்!*

*பாஞ் :-நானும் வணங்குகிறேன் குருதேவா!*

*சாணக் :-நன்றி, நன்றி. இருவரும் அப்படி அமருங்கள்.*
*(ஆசனத்தை சுட்டிக்காட்டுகிருர்)*

*சந்திர :-அழைத்தீர்களாம் குருநாதா!*

*சாணக் :-ஆம்! அழைப்பு விடுத்தேன் காவலாளி மூலமாக! ஏன் மன்னருக்கு ஏதாவது அவசரமான வேலைகள் இருக்கிறதோ!*

*சந்திர :-அப்படியொன்றுமில்லை குருநாதா! ஒருவேளை இருந்தாலும் அது தங்களைச் சந்திப்பதைவிட மேலானதா என்ன?*

*சாணக் :-இந்த அளவிற்கு அபிமானம் இருக்கிறதே; அதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஓஹோ! மறந்தே போய்விட்டேன். இன்று மன்னருடைய திருநாண் பூட்டு விழா அல்லவா!*

**பாஞ் :** ஆமாம் ஆமாம்! குருநாதர் எங்கே வராமல் இருந்து விடுகிறீர்களோ என்று நான் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தேன். மன்னர் தான் மலை நாட்டு இளவரசியை மாலை இடப் போகும் மகிழ்ச்சியில் தங்களைச் சந்திப்பதற்கு மறந்து போய்விட்டார். பாவம், அவர் என்ன செய்வார். பருவத் துடிப்பு. சிறியார் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடமை. சந்திரகுப்தருக்கு வேண்டி தங்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் குருநாதா!

**சந்திர :**-பாஞ்சாலா! நீ சற்று சும்மா இரு. குருநாதரை அழைக்க நான் மறந்திருந்தாலல்லவா மன்னிப்பு கேட்க வேண்டும். ஏற்கனவே அழைப்பு அனுப்பியிருக்கிறேன். இப்பொழுதும் நேரில் சென்று ஆசி பெற நினைத்தேன்! இதற்குள் சந்தித்திருப்பேன்; உன்னைச் சந்தித்திருக்காவிட்டால்! அதற்குள் குருநாதரே அழைத்துவிட்டார்.

**சாணக் :**-சந்திரகுப்தா, இந்த இடத்தில் தான் நம்மிருவருக்குமுள்ள நெருங்கிய தொடர்பு இருக்கிறது. பார்த்தாயா! நீ நினைப்பதை நான் முடித்துவிட்டேன். நான் நினைப்பதையும் நீ முடித்துவிடுவாய் என்று நம்புகிறேன். நல்லவர் இருவர்களுடைய சினேகிதமே ஒருவருக்கொருவர் விரும்பியதை சொல்லாமல் செய்து முடிப்பதுதானே!

*பாஞ் :-அதிலென்ன சந்தேகம்!*

**சந்திர :**-தாங்கள் நினைத்ததை நான் இது

வரை நிறைவேற்ருமல் இருந்ததே கிடையாதே!

**சாணக் :**-சந்திரகுப்தா நீ என் சிஷ்யன் தானே!

**சந்திர :**-அப்படிச் சொல்லிக்கொள்வதற்கு இன்னும் நூறு ஜென்மங்கள் எடுத்து விடத் தயாராக இருக்கிறேன் மகராஜ்!

**சாணக் :**-உன்னிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன்! நான் சொல்லப் போவதை நீ மீறவோ அல்லது கேட்டவுடன் சீறவோ மாட்டாயே!

**சந்திர :**-தங்களுடைய திருவாய் அருளுவதற்கும் என்னுடைய இரு தோள்களும் அதை நிறைவேற்றுவதற்கும் தானே படைக்கப்பட்டிருப்பதாகக் கருதிக் கொண்டிருப்பவன் நான்.

**சாணக் :**-உன் எண்ணத்திற்கு விரோதமாக நான் ஏதாவது சொன்ஞல் கூடவா?

**சந்திர :**-தேவரீர் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் சந்திரகுப்தனின் நன்மைக்காகத்தான் இருக்குமே ஒழிய தீமைக்காக இருக்காது என்பது என்னுடைய திடமான நம்பிக்கை.

**சாணக் :**-அப்படியென்ருல் மிகவும்மகிழச்சி! நான் உன்னை பரிசோதிக்க விரும்புகிறேன்.

**சந்திர :**-என்னையா மகராஜ்! நான் அதற்கு தயாராக இருக்கிறேன்!

**சாணக் :**-பிறகு சஞ்சலப்படமாட்டாயே!

**சந்திர :**-நிச்சயமாக சஞ்சலப்பட இடம் இல்லை மகராஜ்!

**சாணக் :**-அப்படியென்ருல் உனக்கும் சாயா தேவிக்கும் திருமணம் நடக்கக்கூடாது?

**சந்திர :**-(அதிர்ச்சியை சமாளிக்க முடியாமல் திணறிக்கொண்டு) மகராஜ்! மகராஜ்! தங்கள் வாயிலிருந்தா இந்த வார்த்தைகள்...

**சாணக் :**-ஆம்! இது சாதாரண வார்த்தைகளில்லை சந்திரகுப்தா!சாணக்கியனின்! இல்லை! இல்லை! உனது ராஜகுருவின் கண்டிப்பான கட்டளை!

**சந்திர :**-ஆனுல் குருநாதா! நான் சொல்வதை...

**சாணக் :**-நீ சொல்லப்போவது எனக்குத் தெரியும். தயவு செய்து இந்த ஒன்றையும் தவிர வேறு எது வேண்டுமானுலும் கட்டளையிடுங்கள் உடனே நிறைவேற்றிடுகிறேன். இந்தச் சணமே செத்துப்போ என்ருலும் இப்போதே இறந்துபடுகிறேன். இந்த ஒன்றை மட்டும் தாங்கள் கூருதீர்கள் என்று தானே சொல்லப் போகிருய். தேவையில்லை! ஹூம் உன்னைச் சொல்லி குற்றமில்லை. அந்த அளவுக்கு சாயாதேவியின் மேல் உனக்கு ஏற்பட்டிருக்கும் போதைதான் உன்னை இப்படியெல்லாம் பேசச் சொல்கிறது. ஆனுல் ஒன்றை மட்டும் நீ தெரிந்துகொள். ஆசை அறுபதுநாள், மோகம் முப்பதுநாள். தேசபக்திக்கும் தியாகத்திற்கும் இறப்பே கிடையாது. நான் எதைச் சொல்வதாயிருந்தாலும் உனது நன்மைக்காகவும் மௌரிய சாம்ராஜ்ஜியத்தின் புகழுக்கும் பெருமைக்கும் பங்கம் ஏற்படாமல் இருப்பதற்காகவுமே கூறுவேன். அதனுல்தான் இந்தத்.........

**சந்திர :**-அரசியலுக்கும் திருமணத்திற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது மகராஜ்!

**சாணக் :**-(கோபத்துடன்)உன்னுடைய ஒவ்வொரு குறுக்கு விசாரணைக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க நான் உன்னுட்டு பிரஜையுமில்லை. மன்னன் முன் நிற்கும் குற்றவாளியுமில்லை. இதற்குத்தான் முன்பே கூறினேன், நீ வருத்தமடைவாய் என்று. ஏதோ நான்சொல்ல வேண்டிய கடமை சொல்லிவிட்டேன். இதை மீறுவதோ இல்லை நிறைவேற்றுவதோ உன்னிஷ்டம்.

**சந்திர :**-என்னை மன்னிக்கவேண்டும் மகராஜ். தாங்களே யோசித்துப் பாருங்கள். என்னையே நம்பி இருக்கும் அந்த ஏழைப் பெண் இந்தச் சேதியைக் கேட்டதும் எப்பாடு படுவாள் என்பதை எண்ணிப் பாருங்கள் குருநாதா! தங்களுக்கு ஒரு மகள் இருந்து அவர்களுக்கு இத்தகையதொரு நிலை ஏற்பட்டால் தாங்கள் அதை சகித்துக் கொள்வீர்களா? பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை மெழுகுக் கோட்டையில் செருகுவதுபோல் அழகாக அத்தனை சுலபமாகச் சொல்லிவிட்டீர்களே சாயாவை மறந்துவிடு நீ என்று! சாயாவை மறந்துவிடு நீ! என்று!

**சாணக்** :-சந்திரகுப்தா! உன்னிடம் விளக்கம் கேட்பதற்காக நான் உன்னை இங்கு அழைக்கவில்லை! நீ ஒரு சக்ரவர்த்தி என்பதை மறந்து விடாதே! நீ இந்த தேசத்தின் பொதுச் சொத்து! உன்னுடைய மனம், வாக்கு, செயல், இவைகள் இத்தேசத்தின் நன்மையைக் கருதுவதாகவே இருக்கவேண்டும்.

**சந்திர** :-இதை நான் ஒருபோதும் மறந்தது இல்லையே!

**சாணக்** :-மறக்காமலா! சாயாதேவிக்கும் உனக்கும் திருமணம் என்று மணக்கால் நாட்டினாய் மாவிலை தோரணங்களைத் தொங்கவிட்டாய்! பந்தல் போட்டாய்! பறை சாற்றினாய்! பரம்பரை வழக்கத்தை மாற்றினாய்! உன் கண்களுக்கு சாயாதேவி காதல் சாம்ராஜ்ஜியத்தின் தனிப் பெருந்தலைவியாகத் தென்படலாம். ஆனால் என் விழிகளுக்கு அவள் மௌரிய சாம்ராஜ்ஜியத்தின் சனிவரும் நுழை வாயிலாகத்தான் தோற்றமளிக்கிறாள்! அவள் ஒரு சாதாரண மலை நாட்டு மன்னனின் மகள்!

**சந்திர** :-அதனால்......

**சாணக்** :-அவளுக்கும் உனக்கும் ஏற்படப் போகும் உறவினால் உனக்கும் நாட்டுக்கும் எந்தவித லாபமும் இல்லை!

**சந்திர** :-காதல் என்பது லாபத்தைக் கருதி ஏற்படுவதில்லையே தேவா! அன்புள்ளங்களுக்கு அது அவசியமும் இல்லையே!

**சாணக்** :-அன்பிருக்கும் இடத்தில் துன்பம் வராமல் இருப்பதில்லையே! மாறாக அன்பு விளையாடும் இடத்தில் தான் துன்பம் விளைந்தோடிவருகிறது! அன்பும் துன்பமும் இரட்டைப் பிறவிகள் என்பதை நீ தெரிந்து கொள்ளவேண்டும்! அதனால்தான் இந்தத் திருமணத்தால் எந்தவித லாபமும் இல்லாவிட்டாலும் பேராபத்தாவது ஏற்படாமலிருக்க வேண்டுமல்லவா? அதைத் தடுக்க வேண்டுமானால் நீ சாயாதேவியை மறந்துவிடுவதைத் தவிர வேறு வழியே இல்லை.

**சந்திர** :-ஆனால் எனக்கென்று இதயம் ஒன்று இருக்கிறதே மகராஜ்!

**சாணக்** :-இதயம் ஒன்றே ஒன்றாக இருப்பதால்தான் சாயாதேவியை அந்த இடத்திலிருந்து அகற்றிவிட்டு தாய்த்திருநாட்டுக்கு அதில் இடம் அளிக்க வேண்டும் என்கிறேன். ஒரே சமயத்தில் இருவரும் அதில் இடம்பெற முடியாதல்லவா?

**சந்திர** :-இருவரும் பெண்கள்தானே மகராஜ்! யாரை எண்ணி யாரைப்பிரிவது!

**சாணக்** :-அதற்காக உன் தாய் நாட்டை பலிகொடுக்க விரும்புகிறாயா? நாட்டு மக்களின் பழிச் சொல்லை வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறாயா?

**சந்திர** :-மக்கள் எதைத்தான் சொல்லமாட்டார்கள்! நாளை அதே மக்கள் மன்றம் மன்னராம்! மன்னர்! தன்னையே நம்பி வாழ்ந்த ஒரு பேதைப் பெண்ணை காப்பாற்ற முடியாத கோழை! நயவஞ்சகன்! ஆசை காட்டி மோசம் செய்யும் மோசக்காரன்! என்று கூடத்தான் தயங்காமல் கூறுவார்கள்.......

**சாணக்** :-அப்படியென்றால் இந்தப் பரந்த மௌரிய சாம்ராஜ்யம்!...

**சந்திர** :-என்னுடைய சாயாவுக்கு முன்னால் துச்சம் என மதிக்கிறேன். அவள் இதய சாம்ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியின் விலை கூட பெராதெனக்கருதுகிறேன். இந்த நந்தவம்சச் சாம்ராஜ்ஜியத்தின் மன்னனாக இருப்பதைவிட என் அன்புக் காதலியின் இதயச் சாம்ராஜ்யத்தில் ஏக சக்கிராதிபதியாகப் போவதையே பெரும் பேருகக் கருதுகிறேன்.

**சாணக்** :-என்றால் இந்தத் திருமணத்தை நிறுத்தவே மாட்டாயா?

**சந்திர** :-முடியாது?

**சாணக்** :-முடியாது?

**சந்திர** :-மகாராஜ்! மகராஜ்! திரும்பத் திரும்ப அதையே வலியுறுத்தாதீர்கள் பாவம் ஒரு ஏழைப் பெண்ணின் வாழ்வைப் பாழாக்கவேண்டாம் மகராஜ்! அவள் தங்களுக்கு என்ன தீங்கிழைத்தாள்! சாயா என்னையே தன் உயிராக மதிக்கிறாள்! நான் எந்த முகத்தோடு அவளிடம் சென்று சாயா, நம் காதல் நிறைவேறாது என்று கூறுவேன்! வில்லும் வேலும் வீரவாளும் ஈட்டியும் கேடயமும் காட்டானை பலமும் கொண்ட எனக்கு இந்த ஒரே ஒரு சொல்லைச்

சொல்லும் அளவுக்கு வலிமை இல்லை மகராஜ்! வலிமை இல்லை, இந்தச் சேதியைக் கேட்டாலே போதும். அவள் இதயம் தூள் தூள் ஆகச் சிதரிவிடும். ஒரு பெண்ணின் உயிரைக் குடித்த பழி தங்களுக்கு வேண்டாம் குருநாதா!

**சாணக் :-** நீ என் கட்டளையை நிறைவேற்ற மாட்டாயா?

**சந்திர :-** அதற்கு என்னிடம் சக்தியில்லை மகராஜ்!

**சாணக் :-** ஹூம், நான் உன்னை இப்பொழுது தான் புரிந்து கொண்டேன்! நீ வெறும் சுயநலக்காரன். கேவலம் ஒரு சாதாரணப் பெண்ணுக்காக ஒரு சாம்ராஜ்யத்தின் தலைவிதியையே மாற்றி அமைக்கத் துணிந்துவிட்ட காமாந்தகாரன்என்று. இத்தகைய ஒருவனுக்காக என்னுடைய அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தியதற்காக நான் மிகவும் வெக்கப்படுகிறேன். வேதனை அடைகிறேன். இந்த இழி நிலையில் உயிர்வாழக் கூட விரும்பவில்லை. நான் உனக்கு இத்தனை நாள் செய்து வந்த உதவிக்கு நீ எனக்களிக்கும் பரிசு மரணமாகவே இருக்கட்டும்! அந்தச் சாவாவது எனக்கு அமைதியை கொடுக்கட்டும்!...

(மன்னன் இடையிலிருந்த உடைவாளைப் பிடுங்கி தன் மார்பில் பாய்ச்சப் போகிறார். பாஞ்சாலன் ஓடிவந்து அந்த உடைவாளைப்பிடுங்கித் தூர எறிகிறான்.)

**பாஞ் :-** குருநாதா! இது என்னகாரியம் செய்யத் துணிந்தீர்கள்! தற்கொலை கோழையின் செயல் என்று உபதேசித்த தாங்களா இதற்கு முயன்றீர்கள். ஏதோ மன்னர் இளமை முறுக்கில் பிதற்றுகிறார் என்பதற்காக இப்படியெல்லாம்...... வேண்டுமானால் பாருங்களேன் மன்னர் தங்கள் வார்த்தையை மீறி நடந்ததும் இல்லை! மீறி நடக்கவும் மாட்டார்.....

(சந்திரகுப்தன் சாணக்கியனின் காலடிகளில் வீழ்ந்து.)

**சந்திர :-** மகராஜ், என்னை மன்னியுங்கள் மகராஜ்! இனிமேல் தங்கள் கட்டளைப் படியே நடக்கிறேன்! நான் பழைய சந்திரகுப்தனில்லை மகராஜ்! புதியவன்! புத்தம் புதியவன்! இனி எனக்கென்று, சிந்தனைசக்தி! செயலாற்றும் திறமை! விருப்பு! வெறுப்பு எதுவுமேகிடையாது! தாங்கள் கட்டளை இடவேண்டியது, நான் அடுத்த கட்டத்தில் அதை நிறைவேற்றவேண்டியது! சுருங்கச் சொன்னால் தங்கள் தந்திர புத்தியிலியங்கும் ஒரு இயந்திர மனிதன் சரிதானே மகராஜ்......

**சாணக் :-** இப்பொழுதான் மௌரிய சாம்ராஜ்ய மன்னன் என்ற முறையில் பேசக் கேட்கிறேன். சந்திரகுப்தா, கனவிலும் நான் உன் நன்மைக்காகவே பாடுபட்டுக் கொண்டிருப்பவன் நீ மட்டும் மாமன்னன் ஷெலுயூகசின் மகளை மணம் செய்து கொண்டால் ஷெலுயூகசு நமது நாட்டின் மீது படையெடுக்கவும் மாட்டான். ஷெலு யூகசின் சாம்ராஜ்யமும் நமது சாம்ராஜ்யத்தோடு சேர்ந்து மௌரிய சாம்ராஜ்யத்தின் பரப்பு விரிவடையும். அவனுக்கிருப்பதும் ஒரே மகள்தான். அவளை உனக்கு மணமுடித்துக் கொடுக்கவே அவன் விரும்புகிறான், நீ அறிவும் ஆற்றலும் நிரம்பிய குறைவில்லாத கோமகன் என்பதனால்..

**சந்திர:-** எனக்கென்று எந்தவித இஷ்டமுமில்லை மகராஜ்! தங்கள் இஷ்டம், அது தேசத்தின் லாபம், இதுதான் பிரஷ்டம்!

**சாணக் :-** சந்திரகுப்தா! உன் பேரும் புகழும் இன்னும் பன்மடங்கு பெருகக் கடவுள் கருணைபுரிவாராக........ பாஞ்சாலா!

**பாஞ் :-** குருநாதா!

**சாணக் :-** நீ சென்று சாயாதேவியிடம் சந்திரகுப்தனுக்கும் அவளுக்கும் திருமணம் எந்த விதத்திலும் நடைபெற முடியாது என்று கூறிவிடு. இது மன்னனின் திண்ணமான முடிவு என்பதாகச் சொல். சரி நீ போகலாம்!

**பாஞ் :-** உத்தரவு மகராஜ்! நான் வருகிறேன்!

(பாஞ்சாலன் சென்று விடுகிறான்.)

**சாணக் :-** சந்திரகுப்தா! வா இப்படி! உன்னோடு ஒன்றாக அமர்ந்து விருந்து சாப்பிட்டு நாட்கள் பலவாகிறது! இந்தா இந்தப் பழ ரசத்தைப் பருகுங்கள்! பக்ஷணத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்!

**சந்திர :-** எனக்கு இப்போது பசியேதுமில்லை குருநாதா!

**சாணக்:**-இந்தாருங்கள்! இந்தப் பழ ரசமாவது சாப்பிடுங்கள்! அப்பொழுதுதான் என் மனம் அமைதியடையும்.

**சந்திர:**-ஆகட்டும் மகராஜ்!

(பழரசத்தில் தூக்க மருந்து கலந்திருந்ததால் சிறிது நேரத்தில் படுத்துத் தூங்கி விடுகிருன்.)

**சாணக்:**- (எக்காளச் சிரிப்புடன்) இந்தச் சாணக்கியன் இதுவரை எந்த விஷயத்திலுமே தோல்வியடைந்ததில்லை. தோல்வி அடையப்போவதும் இல்லை! மண்கோட்டையாக இருந்தாலும் நான் கட்டினுல் அது மனக்கோட்டையேதான்! முட்டாள்! சந்திரகுப்தன்! வளமும் வசதியும் உள்ள செலுயூகஷோடு உறவு வைத்துக் கொள்ளாமல் ஏதும் இலாபம் இல்லாத ஏழையைக் கட்டிக் கொண்டு அழப்போகிருனும்! அத்தனை பிடிவாதமா அவனுக்கு! அவன் வேண்டுமானுல் ராஜனுக இருக்கலாம்! நான் அவனுக்கு ராஜாசிரியனல்லவா! காரியமான காரியங்களிலெல்லாம் கடைத் தேற்றி விட்டிருக்கிறேன் அவனை! காமாந்தகாரத்தில் மூழ்கி நேராக என் வழிக்கு வராமல் என்ன பாடுபடுத்தி விட்டான் என்னை! ஏதோ பிழைத்துப் போகட்டும் என்று விடுகிறேன். இல்லையேல் இந்த ராஜ்யத்தையே அழித்து விட்டு சுதந்திரமாகத் திரியத் தொடங்கி விடுவேன்! ஊம், என்னைத் தெரியாது அவனுக்கு! போகப் போகப் புரிந்து கொள்வான்!

(மஞ்சத்தில் சென்று அமர்ந்து கொண்டு)

அப்பாடா! இந்தத் தள்ளாத வயதில் பேசிப் பேசி ஒரே களைப்பாக இருக்கிறது! தாகம் நாக்கை வறட்டுகிறது!

(அவசரத்தில் சந்திரகுப்தன் மீதி வைத்திருந்த பழரசத்தை எடுத்து பருகிவிடுகிருன்.)

அடடா! ஆத்திரத்தில் அவனுக்கு தூக்க மருந்து கலந்து கொடுத்த ரசத்தில் மிஞ்சியதையல்லவா குடித்துவிட்டேன்! வயதான காலத்தில் மயக்கமூட்டும் வஸ்து உடம்புக்காகாதே! அவனைத் தூங்க வைக்க முயன்றேன் இப்போது நானே தூங்கும்படியாகிவிட்டது!

(கொட்டாவி விட்டுக் கொண்டு தட்டுத் தடுமாறி தட்டிலிருந்த பழவகைகளை தின்ன ஆசையோடு ஆனுல் தூக்கம் கண்ணைச் செருக)

அவைகள் தின்பதற்கு புளிக்கும் தான். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். ஹூம், வர வர எனக்கும் அவசரபுத்தியால் அறிவு மயங்கிக் கொண்டே போகிறது! எதையும் நினைத்து நிதானித்துப் பார்க்கும் சக்தியை இழந்து விட்டேனே!

(தூக்க மயக்கத்தால் மஞ்சத்தில் சாய்கிருர்.)

## காட்சி—5

**இடம்:**— சாயாதேவியின் அறை.

**பாத்திரங்கள்:**— சாயாதேவி; பாஞ்சாலன்; சுகுமாரி; சந்திரகுப்தன்.

(சந்திரகுப்தனின் படத்தின் முன்னுல் ஆடிப் பாடிக்கொண்டிருக்கிருள்.)

**சாயாதேவி:**-(பாட்டு) இரவு செல்லுது
பிரிவு கொல்லுது
நிலவு சிரிக்குது நெஞ்சைப் பறிக்குது
தினம் தினம் தினம் தினம் உன்னைப் பார்த்து
மனம் மனம் ஏங்குது உன்னைப் பார்த்து

நந்தவனத்தில் பூக்கள் பூக்கலையா?
நான் தனிமையில் பாடுவது கேட்கலையா?
இந்த உணர்ச்சி உனக்கில்லையா?
இடைவேளை நெஞ்சில் கனக்கலையா?
(இரவு)

சிரிப்பதைப்பார் பல்வரிசையைப் பார்!
திருமணம் முடியட்டும் பரிசளிப்பேன்!
அரசனென்றுள்ள கௌரவமே!
சரிசமம் இனி நாம் இருவருமே
(இரவு)

(பாஞ்சாலன் வருகிருன்)

**பாஞ்:**-ஆம்! ஆசைகொண்ட மனம் என்றும் ஏங்கிக்கொண்டே இருக்க வேண்டியதுதான்.....

(சாயா திடுக்கிட்டு பாட்டை நிறுத்திவிட்டு)

**சாயா:**-யாரது? பாஞ்சாலனு? என்ன உளறுகிருய்?

**பாஞ்:**-உளறவில்லை மகராணியாரே! தவறு! மகராணியாக வரமுடியாதவளே, உண்மையைத்தான் கூறுகிறேன்.....

சாயா :-உண்மையா! அது உன் வாயிலி ருந்தா? என்ருல் நம்பமுடியவில்லை பாஞ்சாலா!

பாஞ் :-நம்ப முடியாதுதான்! எப்படி நம்ப முடியும்! நடக்க முடியாத ஒன்றை நம்பிவிட்டவளுக்கு நடக்கக் கூடியது எதையுமே நம்ப முடியாதுதான்! ஊம் நீயென்ன உலக நியதியே அப்படி யமைந்துவிட்டது! புறப்படும் இடத் தைப் பொறுத்திருக்கிறது பொய் மெய் யாவதும் மெய் பொய்யாகத் தோன்று வதும். (அலட்சிய சிரிப்புடன்) அந்த அளவுக்கு நீ புத்திசாலியா என்ன? ஒரு வேளை நீ மன்னன் மனத்தைக் கவர்ந்த வளாக இருக்கலாம்! ஆனுல் அறிந்த வளாக இல்லையே!

சாயா :-தங்கள் கண்டுபிடிப்புக்கு மிக்க நன்றி! அறியாமல் உறவாட நான் ஒன் றும் சின்னக் குழந்தை இல்லை. தாங்கள் சென்று வரலாம்.

பாஞ் :-வராமலே சென்றுவிடலாம் என்று தான் நினைத்தேன்! ஆனுல் வரும்படிச் செய்துவிட்டதே! மன்னரின் உத்தரவு!

சாயா :-உத்தரவா?

பாஞ் :-ஆம்!

சாயா :-என்னவென்று!

பாஞ் :-சாயாதேவிக்கும் சந்திரகுப்தருக்கும் திருமணம் நடப்பது சாத்தியமில்லை என்று! தனக்காக அவள் காத்திருக்க வேண்டாமென்று! தன் வாழ்நாளைப் பாழாக்கி மன்னரை வழி பார்த்திருக்க வேண்டாமென்று!

சாயா :-ஐயோ போதும்! போதும்! நிறுத்து! இதெல்லாம் உன் சதித்திட்டம்! மன்ன ரின் பெயரால் உன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள நீ நடத்தும் நாடகத்தின் அதி உன்னதமான கட் டம்! உன்னுடைய நடிப்பை நானும் நம்பித்தான் தீரவேண்டுமா என்ன?

பாஞ் :-நடிப்பல்ல தேவி! இது வெறும் நடிப் பல்ல! போற்றத் தெரியாத ஒருவன் கழுத்திலே புரளப் போன உன்னை! மாற்றுத் தெரியாமல் தூக்கி எறிந்து விட்ட மடையனின் கண்ணெதிரே! மாலை சூட்டி மங்கல மங்கையாக்கிவிட எண்ணி உன்மேல் உண்மையான காதல் கொண்டவனின் துடிப்பு! உயிர்த் துடிப்பு! நீ மட்டும் உன் விழியால் ஒரு ஜாடை காட்டினுல் போதும். இந்தக் கணமே......

சாயா :-ஒரு ஜாடை என்ன? ஒரே ஜாடை செய்கிறேன்! இந்தக் கணமே நீ இங் கிருந்து சென்று விடு என்று. இல்லை யேல் இந்தச் சாயா பேயாக மாறி உன் உயிரைக் குடித்துவிடுவாள்! புல்லனே, என் முன் நில்லாதே ஓடிப்போ!

(தன் இடுப்பில் இருந்து பட்டாக் கத்தியை ஓங்க நடுநடுங்கி பாஞ்சாலன் ஓடிப்போகிருன்)

பாஞ் :-(ஓடிக்கொண்டு) போகிறேன் சாயா ஓடிப் போகிறேன்! நீயும் என்னைப் போல் ஓடத்தான் போகிருய்! நான் அதைக் கண்டு கூத்தாடத்தான் போகி றேன். அதன்பின் என் வாழ்க்கைக் கதவை மூடத்தான் போகிறேன்! நான் சொல்வதை நன்ருகக் கேட்டுக்கொள்...

சாயா :-நான் சொல்வதையும் கேட்டுக் கொள்! இனி இந்தப் பக்கமாக வருவ தாயிருந்தால் எமலோகத்தில் உனக் கொரு இடம் ஒதுக்கிப் போட்டுக்கொள்! உன் ஜாலம் கீல மெல்லாம் உன்னைப் போல் ஒரு நரியிடம் காட்டிக்கொள்! ஒழுக்கத்தைப் பற்றி ஒரு சின்னக் குழந்தையிடம் பாடம் கேட்டுக்கொள்! மூர்க்கனே! ஜாக்கிரதை!

(சுகுமாரி வருகிருள்)

சுகுமாரி:-தேவி, மாமன்னர் தங்களைக்காண வருகிருர்!

(சந்திரகுப்தன் வருகிருன்)

சாயா :-மன்னர் மன்னருக்கு என் அன்பு கலந்த வணக்கம்.

சந்திர:- தேவி! நான் இந்த அன்புக்கு அரு கதை யில்லாத பாவி! துரோகி! நீ என்னை மன்னிப்பாயா? எப்படி மன் னிப்பாய்! பரவாயில்லை! மன்னிக்காவிட் டாலும் பரவாயில்லை! என்னுயிரையா வாவது குடித்துவிடுவாயா? தேவி! என் னுயிரையாவது குடித்துவிடுவாயா?

சாயா :-ப்ரபோ! தாங்கள் என்ன பேசுகிறீர் கள்? யாரிடம் இப்படிப் பேசுகிறீர்கள்? தங்களுக்கு சுயநினைவில்லையா என்ன?

சந்திர :-சுயநினைவிருக்கிறது சாயா! ஆனுல் சுய அறிவுதான் இல்லை! அதனுல் தான்... அதனுல்தான்....

சாயா :-அதனால்தான்...?

சந்திர :-இதை உன்னிடம் எப்படிச் சொல்வேன் என் அன்பே! இப்படி அழைக்கக்கூட எனக்கு யோக்கியதை இல்லை! அப்படிப்பட்ட அறிவிலி நான்!

சாயா :-தாங்கள் அப்படியொன்றும் எனக்கு துரோகம் செய்யவில்லையே! பின் ஏன் இந்த பிதற்றல். விஷயத்தை விபரமாகச் சொல்லுங்கள். மன்னவா! எனக்கு என்னவோ போலிருக்கிறது.....

சந்திர :-சொல்லத்தான் வந்தேன்! ஆனால் சோகம் குரல் வளைக்குள் முள்ளைப் போல் நெரித்து வார்த்தை வெளியே வராமல் தடுக்கிறதே! நான் என்ன செய்வேன்! ஐயஹோ! எப்படிச் சொல்வேன்! சாயா! சாயா! என்னை அந்தப் பார்வை மட்டும் பார்க்காதே! அதைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் எனக்கில்லை! சொல்லிவிடுகிறேன்! சொல்லி விடுகிறேன்! நாம் ..நாம்... இருவரும்... இருவரும்... இருவராகவே இருக்க வேண்டியதுதான்... ஒருவராக முடியாது சாயா! ஒருவராக முடியாது!

சாயா :-மகராஜ்! இது தாங்கள்தானா பேசுகிறீர்கள்.

சந்திர :-இல்லை! இல்லை; நானாகப் பேசவில்லை! தேசம். தேசம்!

சாயா :-தேசம் என்ன சொல்கிறது.

சந்திர :-நம்முடைய திருமணம் நடக்க முடியாதென்று!

சாயா :-ஏன்?

சந்திர :-நாட்டிற்காகத்தான் மன்னவன். மன்னவனுக்காக நாடில்லை! நாடு பீடும் பெருமையும் பெற்று சிறக்க வேண்டுமென்றால் நம் திருமணத்தில் நலனில்லை என்று......

சாயா :-இதை நான் ஒரு போதும் ஒப்புக் கொள்ள முடியாது பிரபோ! இந்த கடுமையான தண்டனையை அனுபவிக்கும் உறுதி எனக்கில்லை தலைவா! எனக்கில்லை! தாங்கள் ஒரு போதும் இந்த முடிவுக்கு வந்திருக்க முடியாது! இது யார் யாரோ செய்த சூழ்ச்சி!

சந்திர :-சூழ்ச்சியில்லை சாயா! என்னுடைய ஆட்சியை நிலைநாட்ட உதவிய குரு தேவர் சாணக்கிய பெருமானின் மீற முடியாத கட்டளை! தேவி, நான் என்ன செய்வேன்! கடமையைத் துறப்பதா? காதலைத் துறப்பதா? என் நிலையை நீயே யோசித்துப் பார் சாயா! இரு தலைக் கொள்ளி எறும்புபோல் பரிதவிக்கிறேன். இந்த நிலையில் சாவதே மேல் என நினைக்கிறேன்? ஆம் அதுதான் சரி! அதுதான் சரியான முடிவு.

(தன் உடை வாளை உருவுகிறான்.)

சாயா :-ப்ரபோ ப்ரபோ! என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்? நான் இதற்கு ஒரு போதும் அனுமதியேன். கேவலம் இந்த சாயாதேவிக்கு வேண்டி தங்கள் ஆவி பிரிவதை சாயா ஒரு போதும் சகிக்கமாட்டாள். ஏன், என் போன்ற எந்தப் பெண்ணுமே பொறுக்கமாட்டாள். தங்கள் நிலைமை எனக்கு நன்றாகப் புரிகிறது மகராஜ்! தங்கள் குரு தேவர் கட்டளைப்படியே தாங்கள் வேறொரு பெண்ணை மணந்துகொண்டு சுகமாக வாழுங்கள் மகராஜ்! (கண்களில் நீர் ததும்ப) எனக்கு எந்தவித வருத்தமும் இல்லை. தங்கள் நன்மை என் பாக்கியம். உங்களுடைய நாடு என்னிடம் இதைத் தான் கேட்கிறது. நான் ஒரு போதும் இனி உங்கள் வாழ்வில் குறுக்கிடமாட்டேன். ஆனால் இறக்கும் போதும் உங்கள் நினைவாகவே இறப்பேன்! நான் போகிறேன், மகராஜ்! போகிறேன்.

(சந்திரகுப்தனின் காலடிகளை வணங்கிவிட்டு மறைகிறாள்.)

சந்தர :-சாயாதேவி! சாயாதேவி! என் அன்புக் காதலியே! சாயா!

(மயங்கிக் கீழே விழுகிறான்)

## காட்சி—6

இடம்:- சந்திரகுப்தனின் அறை.

பாத்திரங்கள்:- ராஜமாதா, சந்திரகுப்தன்.

ராஜ :-சந்திரகுப்தா! நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா?

சந்திர :-அம்மா! என்னை மன்னித்துவிடுங்கள் அம்மா. நான் என்ன செய்வன் தாயே! இது சாணக்கிய தேவரின் கட்டளை?

ராஜ :-தன்னையே நம்பி வாழ்ந்த ஒரு பெண்ணைப் புறக்கணிக்க சொல்லுவதுதான் ராஜகுருவின் கட்டளையோ! உலகம்

முழுவதும் தேடிப் பார்த்தாலும் இந்த மாதிரி ஒரு நல்ல பெண் கிடைக்கமாட்டாளேடா! அந்த அழகு தேவதையின் முகத்தைப் பார்த்து இந்த துயரச் சம்பவத்தை சொல்ல உனக்கு எப்படியடா துணிவு பிறந்தது?

சந்திர :-குருதேவரின் கட்டளையை நான் எப்படி மீறுவது தாயே. இதுவரை நான் மீறியது கிடையாதே! இப்போது மட்டும் எப்படி மீறுவேன் தாயே!

ராஜ :-அவருக்கு நீ சீடனாக இருக்கலாம். நான் உனக்குத்தாய்! நான் உனக்குக் கட்டளை இடுகிறேன். நீ என்னைத் தெய்வமாக மதிப்பது சத்தியமானால், கள்ளங் கபடம் இல்லாத வெள்ளை உள்ளங் கொண்ட அந்தப் பெண் சாயா தேவியை மணம் முடித்துத்தான் ஆக வேண்டும். அவள் வாழ்வில் ஒளி ஏற்றித்தான் ஆகவேண்டும்......

சந்திர : அம்மா! நான்... நான்...

ராஜ :-நான் சொல்வதை நீமதித்து நடப்பது உண்மையானால், மாதா பிதா குரு தெய்வம் என்ற அறிவுரையில் எனக்கு முதலிடம் நீ கொடுத்து வந்தது சத்தியமானால் என் கட்டளையை இப்பொழுதே நிறைவேற்றியாக வேண்டும். சந்திரகுப்தா! அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்ததுமே எந்தக் கல் நெஞ்சமும் கரைந்துவிடுமேடா! அவள் உன்னைப் பற்றி இன்னும் என்ன சொல்கிறாள் தெரியுமா? ''நான் எங்கு வாழ்ந்தாலும் எந்த நிலையில் வாழ்ந்தாலும், எப்போதும் அவருடைய நல்வாழ்வுக்கும், புகழுக்கும், கடவுளை வணங்கிக்கொண்டே இருப்பேன்'' என்கிறாள். எவ்வளவு உயர்ந்த உள்ளம்! என்ன மனப் பான்மை! அந்தக் கோவிலிலே எரிந்த விளக்கை அணைத்துவிட்டாயேடா. ஜீவ ஜோதியை மறைத்து விட்டாயேடா! போ, இப்பொழுதே போ. அவள் எங்கிருந்தாதாலும் தேடி அழைத்துக்கொண்டு வா. இந்த அரண்மனையைவிட்டு அம்மழலைப் பெண் வெளியேறு முன் அவளை அழைத்துக் கொண்டு வா! ஊம் செல். என் கட்டளையை உடனே நிறைவேற்று. ஒரு பெண்ணின் துயரம், ஒரு பெண்ணுக்குத்தான் தெரியும். போ! போ! போ! அப்பொழுதுதான் நீ என் மகன். போ, போ, போடா போ.

சந்தி:-ஆகட்டும் தாயே! தங்கள் கட்டளைப் படியே செய்கிறேன் அம்மா! தாங்கள் என் அறிவுக் கண்களைத் திறந்துவிட்டீர்களம்மா! இப்பொழுதே சென்று சாயா எங்கிருந்தாலும், என் காதலி சாயா எங்கே இருந்தாலும் அழைத்துக் கொண்டு வந்து என் மனைவியாக்கிக் கொள்கிறேன் தாயே! என் மனைவியாக் கொள்கிறேன். போதுமா தாயே! போதுமா தாயே!

ராஜ :-மகனே இப்போதான் என் உச்சி குளிர்ந்ததடா! எனக்குத் தெரியும் என் பிள்ளை ஒரு போதும் என் சொல்லை மீற மாட்டானென்று போடா மகனே! போ. சாயாவை தேடி அழைத்துக் கொண்டுவா.

(காவலர் இருவர் சாயா தேவியை தாங்கி சுமந்து கொண்டு வர பாஞ்சாலன் வருகிறான். சாயா அரை மயக்க நிலையிலிருக்கிறாள்.)

பாஞ் :-தேடிப் பிரயோஜனமில்லை தாயே. தேற்றியும் பிரயோஜனமில்லை.

ராஜ :-சாயா! அம்மா சாயா, உனக்கு என்ன நேர்ந்ததம்மா?

சந்திர :-சாயா, சாயா. என் அன்பே, நான் உன்னை இந்தக் கோலத்திலா காண வேண்டும்? ஐயோ! தெய்வமே, பாஞ்சாலா, என்ன நடந்தது? புரியும்படிச் சொல். புரியும்படிச் சொல்...

பாஞ் :-என்ன நடந்தது என்று கேட்கிறீர்கள் அரசே, நடக்கக்கூடாததெல்லாம் நடந்துவிட்டது. பேதைப்பெண். காதலின் தோல்வியை தாங்க முடியாதவள் சாதலே நன்றென கொண்டுவிட்டாள் இந்த திட்டத்தை. உண்டுவிட்டாளிவள்விடத்தை. சென்று சேரப் போகிறாள் தன் இருப்பிடத்தை.

ராஜ :-அடி பாவி, என்ன காரியமடி செய்து விட்டாய்! நான் ஒருத்தி இருக்கிறேன் என்பதைக் கூடவா மறந்துவிட்டாய். நான் எதையெண்ணியடி என் வாழ்க்கையில் பூரிக்கப் போகிறேன். என்னதை சாதிக்கப் போகிறேன். இருந்த ஒரே ஒரு ஆசையையும் நிராசையாக்கி விட்டாயே! சாயா, சாயா. நீலி, நெஞ்சழுத்தக்காரி. உனக்காக இந்தப் பாவி பட்ட கஷ்டத்தை அறிவாயா நீ? உனக்குத்தான் சாகத் தெரியும் என்ற நினைப்போ, கோழையே இந்த இழப்பு

உன்னோடு மட்டும் முடிந்துவிடும் என்று நினைத்தாயோ, பேதையே......சாயா, சாயா.

**சாயா :**-(திக்கி திக்கி) அம்மா! என்னை மன்னித்துவிடுங்கள் அம்மா, என்னுடைய இருதயம் மென்மையானது. அதற்கு பெரும் துயரத்தை தாங்கும் வலிமை இல்லை அம்மா! என்னை மன்னித்து விடுங்கள் அம்மா!

**சந்திர :**-அன்பே, சாயாதேவி! என்னை மன்னிப்பாயா? மன்னன், மாமன்னுக வேண்டும் என்று பேராசை கொண்ட இந்த கொடியவனை மன்னிப்பாயா? பட்டம், பதவிக்கு ஆசைப்பட்டு சட்டம் சதி தெரிந்த சாணக்கியரின் சொல்லைக் கேட்ட இந்த சண்டாளனை மன்னிப்பாயா தேவி? மன்னித்தேன் என்றொரு வார்த்தைசொன்னுல்தான் மனம்நிம்மதி அடையும். சாயா, சாயா, நீ அவசரப் பட்டு விட்டாய். சிதைந்த கோட்டையை சீர்படுத்துமுன் நீ அதை உதைத்து தள்ளிவிட்டாய். சற்று முன்னுல்தான் என்னைப் பெற்ற என் தெய்வத்தால் தெளிவு பெற்று உன்னைப் பெற்றுவிட ஓடோடி வந்தேன். உன்னை இந்த நிலையில் காண்பதற்காகவா, சூரிக் கத்திபோல் சீறிப்பாயும் ஒளிப் பிழம்புகளால் என் கண்கள் குருடாகாமல், பேரிடி முழக்கும் பீரங்கிக் குண்டுகளின் பேரிரைச்சலால் என் காதுகள் செவிடுபடாமல், மயிரிழையில் துப்பாக்கிக் குண்டுக்கு என் மார்பு இலக்காகாமல் என் உயிரைப் பன்முறை அன்னிய நாட்டாரோடு நடந்த போரில் காப்பாற்றிய உன்னுயிருக்கு நான் அழிவு தேடக் காரணமாகிவிட்டனே சாயா! அழிவு தேடக் காரணமாகிவிட்டேனே. விடமாட்டேன், ஹு^ம் உன்னை அழியவிடமாட்டேன். எப்படியும் காப்பாற்றியே தீருவேன். அதற்கு என் உயிரையே வேண்டுமானுலும் கொடுப்பேன். பாஞ்சாலா, ஓடு, ஓடு நம் அரண்மனை வைத்தியரை அழைத்துக்கொண்டு ஓடோடி வா. நிற்காதே போ, ஓடிப்போ.

**சாயா :**-வேண்டாம் மகராஜ், வைத்தியரைக் கூப்பிடவேண்டாம், நான் இனிப் பிழைக்க மாட்டேன். உங்கள் மீது எனக்கு எந்தவித வருத்தமும் கிடையாது. நீங்கள் சந்தோஷமாக ஷெலுயூக்கஸ் மகளை மணஞ் செய்து பேரும் புகழுடன் நீடுழி வாழவேண்டும். ஆனுல் இந்த ஏழை ராஜகுமாரிக்கு தங்கள் இதயத்தில் நிரந்தரமான ஒரு இடம் வேண்டும். இதுதான் என் வேண்டுகோள். நான் வருகிறேன் மகராஜ், வருகிறேன்.

(கைகூப்புகிருள், உயிர் பிரிகிறது)

**ராஜ, சந்திர :**-சாயாதேவி, சாயாதேவி, ஐயோ! சாயாதேவி எங்களைவிட்டுப் பிரிந்து விட்டாயே சாயாதேவி! உன்னுடைய அன்பை நிரந்தரமாக நாங்கள் அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவர்களாகிவிட்டோம். எங்களை மன்னிப்பாயா நீ? நீ! நீ! எங்கள் தெய்வம்! எங்கள் குலதெய்வம் சாயாதேவி! எங்கள் மாளிகையில் பவனி வரும் கன்னித் தெய்வம் நீ சாயாவேி! உன்னை கை கூப்பி வணங்குகிறோம் தேவி!

(திரை வீழ்கிறது)

(நாடகம் முற்றும்)

# குயில்கள் கூசின அல்ல, பேச நாணின !

——— " சித்திரை " ———

தீந்தமிழில் மொழியை முதனிலைப்படுத்திக் கண்ட காப்பியம் இராமகாதை, இஃது, வட மொழியில் எழுந்த வால்மீகி இராமா யணத்தை முதன் நூலாகக் கொண்டு பாடப் பட்டதாக இருந்தாலும், கம்பனின் கவித் திறத்தால் தமிழ்ச்சுவை மிகுந்து, கற்ருேர் இதயம் களிப்பில் ஆழ்வது கண்கூடு. இதனை உணர்ந்தே அமரகவி பாரதியும்,

"கல்வி சிறந்த தமிழ்நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு",

என்று உள்ளம் பூரிக்க, எக்காளத்துடன் பாடுகின்ருர்.

இப்பீடு மிகு காப்பியத்தில் கற்றுக் கேட் டுச் சுவைக்க வேண்டிய பாடல்கள் எண் ணற்றவை. அவற்றுள் ஒன்று ஈண்டு காணு வோம்.

இராகவன் மிதிலையில் சனகனுக்கு சிவன் தந்த வில்லிற்கு நாணேற்றும் போட்டியில் வெற்றி பெறுகின்ருன். போட்டி விதிப்படி சீதை இராகவனுக்குச் சொந்தம் ஆகின்ருள். இவ்விருவர்தம் இன்பப் பிணைப்பை உல கிற்கு அறிவிக்கும் முகத்தான் திருமண விழா நாள் குறிக்கின்ருன் சனகன். இச்செய் தியை, தயரதனுக்குத் தூதுவர் மூலம் தெரி விக்க ஆவன செய்கின்ருன்.

சனகனது தூதுவர் மூலம் செய்தி அறிந்த தயரதன் தன் துணைவியர்களுடனும், மற் றைய அரசியல் அங்கங்களுடனும் குடி மக் களுடனும் மணவிழா பொருட்டு மிதிலை ஏகு கின்ருன். சூரியகுலக் கொழுந்தின் மண விழா காண வேண்டிச் செல்வோர் குழாத் தில் அழகிய மங்கையர்களும், இளவல் களும் பங்கு பெற்றுச் செல்கின்றனர். இக் குழுவினர் வழியில் சந்திரசைல மலையில் தங்குகின்றனர். அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சி களைத் தொகுத்துத் தருகின்ருன் கம்பன், "வரைக் காட்சிப் படலம்" ஆக

இளமை மிகு, அழகுமிகு, செல்வமிகு, உள்ள நிறைவு மிகு ஆடவர்களும் பெண் டிர்களும் இயற்கை அழகு மிகு சூழ்நிலையில் கூடிவிட்டால் அங்கு விளையும் இன்பப் பெருக்க நிகழ்ச்சிகளுக்கு அளவும் உண்டோ!

"... ..., வழுவி விண் நின்று
அமரர் நாடு இழிந்த தென்னப்

பொலிந்தது அவ் அனீக வெள்ளம்,"

என்ற இப்பாடல் அடிகளில், இவர்கள் தம் வரவால் சந்திர சைல மலையிற்கே அமரர் நாடு இறங்கி வந்துவிட்டதோ? என்று வியந்து பாடுகின்ருன் கம்பன்.

பெண்கள் மயிற்கூட்டங்கள் திரிவது போலத் திரிந்து விளையாடி இன்புற்றனர். ஆடவர்களோ! உடல் தளதளப்புள்ள சிங் கங்கள் திரிவதைப் போலத் திரிந்தனர்.

விளையாடி இன்புறும் பெண்களின் இன் குரலால் எழுந்த ஆரவார ஒலி கேட்டு, ஆங்கு போழ்ந்தக் குயில்கள் கூவ வெட்கப் பட்டனவாம். இவ்வெட்கம் அவர்களின் கூட்டத்தைக் கண்ட பயத்தினுல் அல்ல! பின் எதனுல்? வெட்கப்பட்டனவாம், அந்தக் கூவும் சுதந்திரக் குயில்கள். இதனுக்குக் காரணம் கூறுகின்ருன் கம்பன்,

பாசிழைப் பரவை அல்குற்
பண்தரு கிளவித் தண்தேன்
மூசிய கூந்தல் மாதர்
மொய்த்தபேர் அவலை கேட்டுக்
கூசின அல்ல, பேச
நாணின குயில்கள் எல்லாம்!
வாசகம் வல்லார் முன்நின்று
யாவர்வாய் திறக்க வல்லார்".

என்ற பாட்டால் அப்பெண்டிர்கள் கோச லத்தோர்கள். அவர்கள்,

"பெருந்த டங்கண்
பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும்
கல்வியும் பூத்தலால்"
(நாட்டுப் படலம்)

என்ற இப்பாடல் நோக்குபடி அவர்கள் நல்வழியிற் பொருந்திய செல்வமும் கல்வி அறிவும் பெற்றவர்கள். பசும் பொன்னுல் செய்யப்பட்ட மேகலையை அணியப் பெற்ற பரந்த மார்பினையும், தேன் வண்டுகள் மொய்க்கும் கூந்தலையும் உடைய அவர் களது குரல் பண்மயமானது.

இத்தகு பெண்கள் கூடியதால் ஏற்பட்ட ஆரவாரத்தைக் கேட்டு, குயில்கள் அச்ச

முறவில்லை: ஆனால் வாய்திறந்து அவர் தம் குரலுக்குப் பதில் குரல் கொடுக்க வாய் திறக்க வெட்கிப் போயின. பேசவல்லார் முன்பு நின்று வாயைத் திறக்க இயலுமா?

“அப்பெண்களின் குரல் மிகுந்த இனிமையும் குழைவும், மென்மையும் உடையது என்று உணர்ந்து தான் குயில்கள் கூவ நாணின” என்று நயமாகக் கூறுகின்றான் கம்பன்.

மேலும் இப்பாடலின் கடைசி இரு அடிகளும்,

> “தன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
> முந்து கிளவாச் செறிவு.” (குறள்715)

என்ற குறளின் கருத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. இதன் பொருள், “அறிவும் அனுபவமும் உடைய பெரியோர் நிறைந்த சபையிலே பேச்சின் திறனைக் காட்ட முற்படாது அடக்கமாக இருத்தல், நன்மை பயக்கக் கூடியவை என்று சொல்லக் கூடியவற்றுள் எல்லாம் மிக நன்று,” என்பதாம்.

இந்நற்பண்பை, கோசலத்துப் பெண்களின் ஆரவாரம் கேட்டுக் கூவ வெட்கப் பட்ட குயில்களின் செயலைக்காட்டிச் சொல்லாமல் சொல்லுக்கின்றான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

---


## “உதயம்” புதிய முகவரி

இதுகாறும் 27, ராஜகோபால நாயக்கன் தெரு, சென்னை-2-ல் இருந்துவரும் உதயம் அலுவலகம், வருகிற 18—1—65-ம் தேதியிலிருந்து, 27/1, இரண்டாவதுதெரு, சேட் காலனி, எழும்பூர், சென்னை-8 என்ற புதிய, நிரந்தர முகவரிக்கு மாற்றப்பட்டுவிட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். விற்பனையாளர்கள், சந்தாதாரர்கள், விளம்பர தாரர்கள் ஆகிய அனைவரும் புதிய முகவரிக்கே கடிதப்போக்கு வரத்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

‘உதய’த்தின் இயக்குநர்களான திரு. கன்னிக்கண்ணன் திருமதி சகுந்தலா கிருஷ்ணன் ஆகியோருக்கு தனிப்பட்ட முறையில் எழுதும் கடிதங்களையும் புதிய முகவரிக்கே எழுத வேண்டுகிறோம். தொலைபேசி எண். 84103

நிர்வாகி
“உதயம்”
27/1, சேட் காலனி இரண்டாவது தெரு,
எழும்பூர், சென்னை-8.


Edited & Published by Sakunthala Krishnan, At 27/1 Sait Colony Second Street, Egmore Madras-8. Printed by R. Krishnaswamy at Srimathi Printers (S. R and Co.,) 3/30, Mount Road, Madras-2. Founder: Kannikannan